இலங்கையில் செய்தித் பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டது. Registered as a Newspaper at the G.P.O
www.padippakam.com



# புதிய கண்ணோட்டம்

PUTHIYA KANNOTTAM

පුදිය කණ්ණෝට්ටම්

வெளியீடு: 19 | 20 ஆவணி 1995 | விலை: ரூபா 7.00

# சர்வதேச நெருக்கடிக்குள் பிரபாகரன்

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் தூரநோக்கற்ற, இராஜதந்திரமற்ற முடிவுகள் புலிகளை மிகவும் நெருக்கடிக்குள் தள்ளி வருகின்றது.

கடந்த தேர்தலில் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாண வேண்டும். யுத்தம் இதற்கு தீர்வல்ல என்ற ஜனாதிபதியின் கோரிக்கைக்கு 63சதவீத மக்கள் ஆதரவளித்து அவரை ஜனாதிபதியாக்கினார்கள்.

சந்திரிகா அவர்கள் பிரதமரான உடனேயே புலிகளுடன் பேச்சுவார்த்தையைத் தொடங்கினார். ஏறத்தாழ 100 நாட்களுக்கு போர் தவிர்ப்பு ஒப்பந்தமும் அமுலில் இருந்தது. நான்கு தடவைகள் இருதரப்பினரும் சந்தித்துப் பேசியதுடன், கிட்டத்தட்ட 44 கடிதங்களை பரிமாறியும் கொண்டனர்.

ஆனால், புலிகள் திடீரென போர்தவிர்ப்பு ஒப்பந்தத்தை மீறி ஒருதலைப்பட்சமாக யுத்தத்தை ஆரம்பித்தார்கள். புலிகள் எவ்வளவுதான் தமது நிலைப்பாட்டை நியாயப்படுத்த முனைந்த போதும், தமிழ், சிங்கள மக்களும் சரி, சர்வதேச சமூகமும் சரி புலிகளின் விளக்கங்களை ஏற்றுக்கொள்ளவில்லை.

புலிகள் மீண்டும் யுத்தத்தை தொடங்கியது அநாவசியமானதும், அர்த்தமற்றதும் என்ற நிலைப்பாடே உலகம் முழுக்க நிலவி வருகின்றது. ஏனெனில், மீண்டும் யுத்தத்தை ஆரம்பித்தமைக்கு தர்க்கரீதியான காரணத்தையோ அல்லது நியாயமான காரணங்களையோ புலிகளால் முன்வைக்க முடியவில்லை.

அதுமாத்திரமல்லாமல் அரசாங்கத்தின சர்வதேசரீதியான ராஜரீக முன்னெடுப்புக்களை (Diplomatic offensive) புலிகளால் முறியடிக்கவும் முடியவில்லை.

அரசியல் தீர்வில் அக்கறை கொண்டதாக காட்டிக் கொண்ட சந்திரிகா அரசு, அது புலிகளால் மீறப்பட்டபோது அவர்களைப் பேச்சுவார்த்தைக்கு கொண்டு வரவும், தம்மைப் பாதுகாத்துக் கொள்ளவுமே தாம் யுத்தம் நடாத்துகின்றோம் என்று கூறுகிறது. அதுமாத்திரமல்லாமல், ஓரளவுக்காவது நியாயபூர்மான தீர்விற்கான ஆலோசனைகளையும் முன்வைத்தது.

சந்திரிகாவின் ஆலோசனைகளுக்கு இந்தியா உட்பட அமெரிக்கா, இங்கிலாந்து, கனடா, அவுஸ்திரேலியா, பிரான்ஸ் போன்ற பல நாடுகள் தமது அங்கீகாரத்தை வழங்கியுள்ளதுடன், இதனடிப்படையில் புலிகள் போரை நிறுத்தி பேச்சுவார்த்தைக்குப் போக வேண்டுமென வலியுறுத்தி வருகின்றன. ஏற்கனவே யுத்தமீறல்களுக்காக இந்நாடுகள் யாவும், புலிகளைக் கண்டித்திருந்தமையையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.



ஆனால் புலிகளின் ஆலோசகர் பாலசிங்கம் அரசாங்கத்தின் ஆலோசனைகளை முழுமையாக நிராகரித்துள்ளதுடன், அரசாங்கம் தம்முடன் மாத்திரமே பேச்சுவார்த்தை நடாத்த வேண்டுமெனவும் கோரியுள்ளார்.

அதேசமயம், கிராம ரீதியான புலிகளின் கொள்கை விளக்க கூட்டங்களில், இத் தீர்வு அவசியமற்றது, இது இறுதியுத்தம், இன்னும், ஓரிரு வருடங்களில் "தமிழீழம்" மலர்ந்துவிடும் என்றே விளக்கமளித்து வருகின்றார்கள். இந்நிலையில் தம்முடன் மாத்திரமே பேச வேண்டுமென்ற பாலசிங்கத்தின் கோரிக்கை எவ்வளவு தூரம் உண்மையானது என்பதும் கேள்விக்குரியதே.

ஆனால் புலிகள் தமது சர்வதேச பிரச்சாரத்தின் மையங்களாக இருந்து செயற்படும் பிரான்ஸ், இங்கிலாந்து போன்ற நாடுகள் மாத்திரமல்லாமல், ஐரோப்பிய நாடுகள் பலவும், அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளும் புலிகளுக்கெதிரான போக்கினைக் கடைப்பிடிக்க ஆரம்பித்துள்ளன.

வெளிநாடுகளில் இருக்கும் இலங்கைத் தமிழரிடம், (அவர்கள் அகதிகளாக இருந்தாலென்ன, அந்நாட்டு பிரஜைகளாக இருந்தாலென்ன) புலிகள் கணிசமான நிதியை சேகரித்து வந்ததுடன், ஆரம்பத்தில், புலிகள் உட்பட பல்வேறுபட்ட இயக்கங்களும், இலங்கைக்கு மேல் சர்வதேச நெருக்கடிகளை கொண்டுவர இங்கிருந்து செயற்பட்டு வந்தன.

ஆனால், புலிகள் பேச்சுவார்த்தைக்கு திரும்பாமல் யுத்தத்தை தொடரும் பட்சத்தில் இந்நாடுகள், அங்கிருக்கக்கூடிய புலி இயக்க கிளைகளின் மீது மேலும் அழுத்தங்களைக் கொண்டு வருவதற்கான சந்தர்ப்பங்கள் அதிகரித்து வருகின்றன.

இப்படியான அழுத்தங்கள், புலிகளின் நிதி சேகரித்தல் மற்றும் பிரச்சார நடவடிக்கைகளை மென்மேலும் கட்டுப்படுத்தும். எனவே வெள்ளம் தலைக்குமேல் போகுமுன்னர் பிரபாகரன் தனது சிந்தனைகளை மாற்றி அமைப்பதே சிறந்தது.

## இந்தியா இராணுவ நடவடிக்கை எடுக்க வேண்டும்

இந்தியாவும் இலங்கையும் பாரிய பொருளாதார சீர்திருத்தங்களை மேற்கொண்டுவரும் இந்நேரத்தில் இப் பிராந்தியத்தின் அமைதிக்கு அச்சுறுத்தலாக வளர்ந்துவரும் பயங்கரவாதத்தையும், இனவாதத்தையும் முறியடிக்க வேண்டிய பாரிய தேவையும் இவ்விரு நாடுகளுக்கும் உண்டு. இப்பிராந்தியத்தின் ஸ்திரமின்மைதான் திரு.பிரபாகரனின் வியாபாரப் பொருள். இந்தியப் பிரதமர், இலங்கை ஜனாதிபதி உட்பட இலங்கையில் அரசியல் தலைவர்கள் பலரை அவர் கொன்றொழித்துள்ளார். புலிகளின் ஏஜண்டுகள் ஏற்கனவே தமிழ்நாட்டில் ஊடுருவி, தன்னுடைய குறுகிய அரசியல் வெறியை, ஒழுங்கமைக்கப்பட்ட கொலைக் கலாச்சாரத்தை பரப்புவதில் ஈடுபட்டுள்ளனர்.

திருமதி குமாரதுங்காவின் அதிகாரப் பகிர்விற்கான திட்டம், புலிகளின் நியாயாதிக்கத்தை கேள்விக்குறியாக்கியுள்ளது. இதுவரைகாலமும் உதவி மறுத்து வந்த அமெரிக்கா, பிரான்ஸ் போன்ற நிதியுதவி வழங்கும் நாடுகள் மீண்டும் இலங்கை இராணுவத்திற்கு உதவி கொடுப்பதற்கு முன்வந்திருக்கின்றன. இலங்கை இராணுவமும் யாழ்ப்பாணத்தை கைப்பற்றும் ஆயத்தங்களை செய்துவருகின்றது. இந்தியப் பிரதமராவும் இராணுவத் தீர்விற்கும், அரசியல் தீர்விற்கும் தனது அதரவினை அறிவித்துள்ளார்.

இந்நிலையில் திரு. ராஜீவ்காந்தியின் கொலையாளிகளை நீதியின் முன் நிறுத்துவதற்கு 1989ம் ஆண்டுகளில் எடுத்த இராணுவ நடவடிக்கைகளைப் போன்ற நடவடிக்கைகளை இந்தியா மேற்கொள்ளுமானால் நாம் அதை வரவேற்க வேண்டும். ஆனால் அவர்களின் பங்களிப்பு தற்காலிகமானதாக இருக்க வேண்டும். பேச்சுவார்த்தை யுத்தம் மீண்டும் பேச்சுவார்த்தை மீண்டும் யுத்தம் எனும் சங்கிலித் தொடர் ஒருநாள் முடிவுக்கு வந்துதான் ஆகவேண்டும்.

ஹொங்ஹொங்கில் இருந்து வெளிவரும் பிரபல ஆங்கிலப் பத்திரிகையான ASIAN WALL STREET JOURNAL இன் ஆசிரியர் தலையங்கத்தில் இருந்து....

## கூட்டணியின் குறுகல் நோக்கு

ஆரம்பத்தில் ஈழவிடுதலையை நோக்கமாகக்கொண்டு இரண்டு அமைப்புக்கள் செயற்பட்டுவந்தன. தமிழீழ விடுதலைப்புலிகள், ஈரோஸ்ஆகிய அமைப்புக்களே இவ்வடிப்படையில் செயற்பட்டவையாகும். இதனைத்தொடர்ந்து அவ்வியக்கங்களுக்கிடையில் ஏற்பட்ட முரண்பாடுகள் காரணமாக புளொட், ஈ.பி.ஆர்.எல்.எஃப். என்ற இயக்கங்கள் தோன்றின. தங்கத்துரை தலைமையில் ரெலோ என்ற அமைப்பும் உருவாகிவந்தது.

இதற்கு முன்பாக தமிழரசுக்கட்சி, தமிழ் காங்கிரஸ் என்ற இரு கட்சிகளுமே தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி வந்தன. பின்னர் காலத்தின் தேவைகருதி இக்கட்சிகள் இரண்டும் இணைந்து தமிழர் விடுதலைக் கூட்டணியை உருவாக்கிக் கொண்டார்கள். (அச்சமயம் தொண்டமானும் கூட்டணியின் தலைவர்களினுள் ஒருவராக இருந்தபொழுதும் பின்னர் விலகிக் கொண்டார்)

பின்னர் இக்கூட்டணி உருவாக்கிய தமிழீழம் என்ற கோஷத்தை வென்றெடுக்கவே மேற்படி பல ஆயுதக்குழுக்கள் உருவாகின.

தொடர்ச்சி... பக்கம் 5

படிப்பகம்

www.padippakam.com



# கண்ணோட்டம்

## தடைகளை நீக்குங்கள்

3வது யுத்தம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் வட–கிழக்கின் பலபகுதி களுக்கு உத்தியோகபூர்வமாகவோ உத்தியோகபூர்வமற்ற ரீதியிலோ பொருளாதார தடைகள் அறிமுகப்படுத்தப்பட்டுவருகின்றன. மட்டக்களப்பின் வாகரைப் பகுதிக்கும், திருகோணமலையில் வெருகல், ஈச்சிலம்பற்றைப் பகுதிக்கும், வடமாகாணத்தின் பெரும்பான்மையான பகுதிகளுக்கும் இப்பொருளாதாரத்தடை அமுலில் உள்ளது. இங்கு பொருட்கள் கொண்டு போவது முழுமையாகவே அரசாங்கத்தாலோ அன்றி இராணுவத்தாலோ தடை செய்யப்பட்டுள்ளது.

பிரத்தியோகமாக வட–மாகாணத்தைப் பொறுத்தமட்டில் புலிகளின் ஒருதலைப்பட்சமான யுத்தமீறலுடன் ஆரம்பித்த இப்பொருளாதாரத் தடையானது யாழ்ப்பாணம் மீது இராணுவத்தினால் நடத்தப்பட்ட முன்னேற்றப்பாய்ச்சல் என்ற தாக்குதலுடன் இன்னும் தீவிரமாக்கப் பட்டுள்ளது.

இலட்சக்கணக்கான அகதிகளுடன் இருக்கும் யாழ் பிராந்தியத்தில் அரிசி மா தொடக்கம் அனைத்துமே தட்டுப்பாடாகவுள்ளது. தொடர்ச் சியான விமானத்தாக்குதல்கள் செல்வீச்சுக்கள் நடந்தும் கூட காயப் பட்டவர்களுக்கு சிகிச்சை அளிக்கக்கூடிய மருந்துவகைகளும் இல்லாமலே இருக்கின்றது. அகதிமுகாம்களில் தொடர்ந்து நோய்க ளும், சிறுவர், குழந்தைகளுக்கு கொடுக்கப்படவேண்டிய அடிப்படை மருந்துவ வசதிகளும் அற்றே யாழ்ப்பாணம் இருக்கின்றது. அரச தரப்பினரிடம் கேட்டால், போகும் பொருட்களின் பெரும்பகுதியை புலிகள் தமது தேவைக்கு எடுத்துவிடுகின்றார்கள் எனக் கூறப்படு கின்றது. அதில் ஓரளவு உண்மையும் இருக்கலாம். ஆனால் ஐயாயி ரமோ அல்லது பத்தாயிரமோ புலிகளை இல்லாதொழிப்பதற்காக 5இலட்சம் அல்லது 10 இலட்சம் மக்களைப் பட்டினிபோடுவது மனிதாபிமானமும் அல்ல, நாகரீகமுமல்ல. மக்களுக்காகவே அனைத்தையும் செய்கின்றோம் எனக் கூறும் சந்திரிகா அரசாங்கம் இம் மக்களை பட்டினியிலிருந்து காப்பாற்றும் என நம்பிக்கையோடு எதிர்பார்க்கின்றோம். அதனைப் போன்றே மக்களுக்குத் தேவையான அடிப்படை மருந்துவகைகளும் உடனடியாகவே அவர்களைச் சென்றடைய வேண்டும்.

யாழ்ப்பாணத்திற்கு இப்பொருட்கள் போவதற்கு சர்வதேச செஞ்சிலு வைச் சங்கம் பாதுகாப்பு கொடுக்காததாலேயே பொருட்கள் நேரகால த்திற்கு அங்கு சென்றடைவதில்லை என்ற ஒரு குற்றச்சாட்டுள்ளது. ஆனால் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் இதற்கு பாதுகாப்பு கொடுப்பதற்கு புலிகளினதும், கடற்படையினதும் ஒத்துழைப்பைக் கோருகின்றது. மக்களைப் பட்டினிச் சாவிலிருந்து காப்பாற்றுவதற்கு புலிகள் நிச்சயமாக ஒத்துழைப்பார்கள் என எதிர்பார்க்கின்றோம். யாழ்ப்பாணத்திற்கு பொருட்கள் போய்ச் சேருவதற்கு சகல தரப்பின ரும் முன்முயற்சி எடுக்கவேண்டுமென ஈபிஆர்எல்எஃப் கோருகின்றது.

**தோழர்களே, நண்பர்களே, வாசகர்களே!**

உங்களிடமிருந்து அபிப்பிராயங்கள், விமர்சனங்கள், ஆலோசனைகளையும், ஆக்கங்களையும் புதியகண்ணோட்டம் வரவேற்கிறது. அனுப்ப வேண்டிய முகவரி:

**புதியகண்ணோட்டம்,
த.பெ.இல: 442,
கொழும்பு**

புதியகண்ணோட்டம் தொடர்பான அனைத்து நேரடித் தொடர்புகளுக்கும்:

29A, வாவிக்கரை வீதி-1,
மட்டக்களப்பு.
☎ 065-2398

88/2, வாடிவீட்டு வீதி,
கல்முனை.

54, மாணிக்கவாசகர் வீதி,
திருகோணமலை.
☎ 026-22858

22, வெளிவட்ட வீதி,
வவுனியா.
☎ 024-2070

மன்னார்
☎ 023-2370

வெளிநாட்டு முகவரிகள்:

Post Bag: 1041,
Madras-17,
India.

B.M.Box: 1738,
London-WCIX-3NN,
U.K.


P.Box: 6800,
Agincourt,
Ont-MIS3C6,
Canada.

E.P.I.C
Box No: 95,
95144, Garges Les,
Gonnesse Cedex,
France.

P.Fach: 100206,
44002 Dortmund,
Germany.

P.Fach: 506,
Bern-17,
Switzerland.

# சின்னச் சின்னச் செய்திகள்



## வவுனியாவிலிருந்து செல்வநாயகம்

யாழ் கொட்டடி நமசிவாயம் வித்தியாலயத்திலிருந்து இயக்கத்திற்கு ஆள்சேர்க்க புலிகள் போயிருக்கிறார்கள். எல்லோரும் சேரவேண்டும் என்று கூறியபின், சேரவிரும்புவோர் பெயர் களைத் தரலாம் என்றதும், அதிபர் குறுக்கிட்டு, "தம்பி பள்ளிக்கூடம் நடக்கிறநேரம் கூட்டிக் கொண்டு போறது சரியில்லை... தாய் தேப்பனுக்கு நாங்கள்தான் பதில் சொல்ல வேணும், பள்ளிக்கூடம் விட்டாப்பிறகு உங்கட வேலையைச் செய்யுங்கோ" என்றாராம். கோபம் கொண்ட புலிகள் அதிபரை அவரது அறைக்குள் வைத்துப் பூட்டிவிட்டனர். பிள்ளைபிடிக்க புலிகள் பள்ளிக்கு வந்திருப்பதை அறிந்த அயலிலுள்ள பெற்றோர் பலர் பாடசாலைக்கு வெளியே குழுமினர். இவர்களைப் பின்கதவைத் திறந்து ஓர் ஆசிரியர் உள்ளே விட்டிருக்கிறார். பெற்றோரைக் கண்டால் மாணவர்கள் சேரமறுப்பார்கள் என்பதால் மாடியிலிருந்த மாணவர் களைப் பெற்றோர் பார்க்க விடாமல் புலிகள் பூட்டிவைக்க... பிள்ளைகளை விடுங்கள் என பெற்றோர் சத்தமிட... பெற்றோருக்கும் புலிகளுக்குமிடையில் ஓர் இழுபறியே நடந்து முடிந்தி ருக்கிறது. புலிகள் உறுமிக்கொண்டே திரும்பிப் போயிருக்கின்றன.

"முன்னேற்றப் பாய்ச்சல்" இராணுவ நடவடிக்கையின் பின் அதிபர்கள் ஆசிரியர்கள் மத்தியில் முன்னாள் ஈரோஸ் தலைவர் பாலகுமார் பேசினார். "முதலில் எமது மண்ணை மீட்டு சுதந்திர மாக வாழவேண்டும் அதன்பின்பே படிப்பு. மாணவர்களுக்கு இவற்றை ஆசிரியர்கள்தான் தெளிவாகப் புரியவைக்க வேண்டும். ஆனால், மாணவர்களை போராட்டத்திற்குச் சேர்க்க நாம் பள்ளிக்கூடங்களுக்குச் செல்லும்போது இந்த ஆசிரியர்களே எதிராகச் செயற்படுகின்றனர். இயக்கம் வருகுது ஓடுங்கோ என பின்கேற்றைத் திறந்து மாணவர்களை ஓடவிடுவது, விடுதி யைப் பூட்டி அவர்களை வீட்டுக்கனுப்புவது என அவர்களின் செயற்பாடு போராட்டத்திற்கு எதிராக உள்ளது. நாம் மாணவர் மத்தியில் செல்லும்போது 12, 13 வயது மாணவர்களே எம்முடன் வருகின்றனர். இவர்களை 16 வயதுவரை பயிற்சி கொடுத்து, உணவு உடை கொடுத்து நாம் போருக்கு தயார்ப்படுத்த வேண்டியுள்ளது இதனால் நபர் ஒருவருக்கு ஒரு இலட்சம் ரூபாவுக்கு மேல் செலவாகிறது எனவே 16 வயதுப்பிள்ளைகள் போராட்டத்திற்குப் போக வேண்டும் என்பதை அவ்வயதிலுள்ள பிள்ளைகளுக்கு தெளிவுபடுத்தி உணர்ச்சியூட்ட வேண்டியது ஆசிரியர்களின் கடமையாகும்."

முன்னாள் ஈரோஸ் தலைவர் பாலகுமார் அங்கு மேலும் பேசுகையில், தனது விசுவாசத்துக்குரிய இன்றைய தலைவரைப் பற்றி ஒரு பெரிய புராணமே பாடியிருக்கிறார். அனைத்துக்கும் சிகரமாக ஓர் உதாரணமும் சொன்னார். வெளிநாட்டுத் தமிழர்கள் சிலரிடம் உங்களுக்கு சக்தி மிக்க ஓர் கனி கிடைத்தால் அதனை யாருக்குக் கொடுப்பீர்கள் எனக் கேட்டபோது, அதிகமானோர் பிரபாகரனுக்குத்தான் கொடுப்போமென்றார்களாம். வெளிநாடுகளிலேயே தமது தலைவர் மீது இவ்வளவு பற்று வைத்துள்ளனர். ஆனால் இங்குள்ள தமிழ் மக்களுக்குத்தான் அவரது அருமை தெரியவில்லை" என வருந்தினார் முன்னாள் மார்க்ஸியப் போராளி.

முன்னேற்றப் பாய்ச்சலின் பின், எல்லா ஆசிரியர்களும் ரூபா 10,000 போராட்ட நிதியாகக் கொடுக்க வேண்டுமென புலிகள் உத்தரவு. 2000 சம்பளம் எடுக்கிற வாத்தியாரின் குடும்பம் 5 மாதத்திற்கு உண்ணாவிரதம் இருக்க வேண்டுமே... ஆனானப்பட்ட போராளி திலீபனே 11 நாளிலேயே இறந்துவிட்டான். நாம் 5மாதம் வயிற்றைக் கட்டுவதெப்படி? என்று புலம்பினார் வவுனியா வந்த ஆசிரியர் ஒருவர்.

அரசுப் படையின் முன்னேற்றப் பாய்ச்சலின் போது நவாலி தேவாலயத்திற்கருகில் குண்டுகள் வீழ்ந்ததில் 180 வரையான மக்கள் உயிரிழந்தனர். இதில் பெருமளவு சிறுவர்களும் கொல்லப் பட்டனர். இதனைப் பார்த்த புலிகள் மக்களுக்கு இப்படி ஆறுதல் சொன்னார்கள்: "எங்களோட சேர்ந்திருந்தால் இப்படிச் செத்திருக்கத் தேவையில்லை. இப்ப வீணாய்த்தானே செத்தது. இதைப்பார்த்தாவது திருந்துங்கோ".

முன்னேற்றப் பாய்ச்சலில் முதல் மூன்று நாளும் இராணுவம் எதிர்ப்பின்றி முன்னேறியபோது... புலிகள் இப்படி ஓடிவிட்டார்களே என மக்கள் மத்தியில் அங்கலாய்ப்பு. இதற்குப் புலிகள் ஒலிபெருக்கியில் தெருத்தெருவாய் பதிலளித்தார்கள். "எமக்கு ஆட்பலம் போதாது. வெளிமாவட் டங்களிலிருந்து நாம் ஆட்களை எடுக்க வேண்டியிருந்தது. எனவேதான் உடனே திருப்பித் தாக்கவில்லை. இதற்குத்தான் நீங்கள் எல்லோரும் இணையவேண்டும் என்று கேட்கிறோம். வீட்டுக்கொரு ஆணும் பெண்ணும் போராளியாக எம்முடன் இணைய வேண்டும்..." ஆமிக்கும் ஆட்பலம் போதவில்லை, புலிகளுக்கும் போதவில்லை என்பது தெரிகிறது. போரில் இழந்து இழந்து இருதரப்பினரும் களைத்துவிட்டனர். இருதரப்புமே வெல்லவுமில்லை. தமிழ் மக்களின் சாவில் வெற்றிகொண்டதெல்லாம் ஆயுத வியாபாரிகளும், போர்த் தரகர்களும்தான்.

அண்மையில் அரசால் முன்வைக்கப்பட்டிருந்த அதிகாரப் பகிர்வு யோசனைகள் அடிப்படையில் ஏற்றுக் கொள்ளப்படக் கூடியவை என பெரும்பாலான கட்சிகள், தொண்டர் ஸ்தாபனங்களாலும், சர்வதேச நாடுகளாலும் பாராட்டப்பட்டது. ஆனால் புலிகள் நிராகரித்துள்ளனர். அதற்கு அவர்கள் சொல்லியிருக்கும் காரணம். இத் திட்டம் எமக்கு(புலிகட்கு)த் தரப்படவில்லை. எமது சம்மதமின்றி அமைந்த மாகாண அரசுக்கு என்ன நடந்தது என்பது தெரியும்தானே. இதுவும் அப்படித்தான் இருக்கும் என்று பாலசிங்கம் கூச்சப்படாமல் கூறியிருக்கிறார். அதிகாரங்கள் போதாதா? மாற்றம் தேவையா என்பது பற்றியதல்ல அவர்கள் பிரச்சினை. எம்மிடம் மட்டும் அதிகாரம் வரும் வகையில் அரசாங்கம் நடந்துகொள்ளவில்லை என்பதுதான். எம்மிடம் தரவில்லையென்றால், "தமிழீழம்" தந்தால் கூட அடித்துக் குழப்புவோம் என்பதே எமது நிலைப்பாடு என்கின்றனர். சரிதானா?

படிப்பகம்

www.padippakam.com



# இனிய தமிழ் மக்களே!....

பலவருடமாக நாம் எல்லோரும் கேட்டு வந்த அரசியல் தீர்வு தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா அவர்கள் ஓர் தீர்வுத் திட்டத்தினை முன்வைத்துள்ளார். இலங்கையில் தமிழ் மக்களுக்கு பிரச்சினை இருக்கின்றது என்பதனை ஏற்றுக் கொண்டு அவற்றினை தீர்ப்பதற்காக ஓர் அரசியல் தீர்வுத்திட்டத்தினை முன்வைத்தது சந்திரிகா அரசாங்கமாகும்.

இத்தீர்வுத் திட்டமானது ஏற்கனவே இந்திய–இலங்கை உடன்பாட்டின் பிரகாரம் மாகாணசபைக்கு அளிக்கப்பட்டிருந்த அதிகாரங்களையும் விட கூடுதலான அதிகாரங்களைக் கொண்டதாகும்.

முக்கியமாக நாம் இதுவரையும் கோரி வந்த பாதுகாப்பு (சட்டம், ஒழுங்கு) முழுமையாகவும், நிலம்–நிலப்பங்கீடு முழுமையாகவும் கொடுக்கப்பட்டுள்ளமையானது நிச்சயமாக வரவேற்கப்பட வேண்டியது மாத்திரமல்லாமல் பழைய அதிகாரப் பங்கீடுகளிலிருந்து தமிழ் மக்களுக்கு சாதகமான மாற்றத்தை உள்ளடக்கியதாகும்.

## அன்பிற்கினிய தமிழ் மக்களே!

இலங்கை சுதந்திரம் அடைந்ததிலிருந்து எமது மாகாணத்திலிருக்கக்கூடிய எமது நிலங்கள் சிங்கள அரசிற்குச் சொந்தமாக இருந்தது. எமது பாதுகாப்பு சிங்கள் பொலிசாராலேயே மேற்கொள்ளப்பட்டது.



இதனால் எமது காணிகள் எமது பிரதேசத்தில் இல்லாத சிங்கள மக்களுக்கு பகிரப்பட்டதுமல்லாமல், எம்மைப் பாதுகாப்பதாகச் சொல்லப்பட்ட சிங்களப் பொலிசாரே சில காலகட்டங்களில் எமக்கு எதிரியாகவும் மாறினர்.

ஆனால் இன்று எமக்குக் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி எமது மண்ணை பகிர்ந்து கொடுக்கவும், எமது மண்ணை நிருவகிக்கவும் சிங்கள அரசிற்கு அதிகாரம் இல்லை. அதேபோன்றே எமது மண்ணில் எமது பாதுகாப்பை நாமே உத்தரவாதப்படுத்த முடியும். சட்டம் ஒழுங்கு அதிகாரத்தினை முழுமையாகவே மாகாணசபைகளுக்கு கொடுத்ததன்மூலம் எமது பாதுகாப்பில் இனி மேல் சிங்களப் பொலிசார் தலையிடவேண்டி ஏற்படாது. இவை போன்ற பல நல்ல அம்சங்கள் எமக்கு முதல் தடவையாகக் கிடைத்துள்ளன.

இலங்கையில் அதிகாரப் பகிர்வினூடாக பிரச்சினைகளுக்கு தீர்வுகாணமுடியும் என்பதை இந்திய–இலங்கை ஒப்பந்தத்தினூடாக இந்தியா ஏற்படுத்திக் கொடுத்தது. அன்று 13வது திருத்தச் சட்டத்தினூடாக எமக்கு சில அதிகாரங்கள் வழங்கப்பட்டன. அவை முழுமையாக இருக்கவில்லை. ஆனால் முழுமையாக்கப்பட வேண்டுமென அன்றைய இந்திய அரசோடும், இலங்கை அரசோடும் ஈ.பி.ஆர்.எல்.எஃப் தொடர்ச்சியாகவே போராடிவந்தது.

வட–கிழக்கு மாகாணசபையை நாம் நடாத்தியபோது 13வது திருத்தச்சட்டம் முழுமையாக மாற்றப்பட வேண்டும் எனவும், அது எவ்வாறு அமையவேண்டும் என்பது தொடர்பாகவும், அதில் உள்ளடக்கப்பட வேண்டிய அதிகாரங்கள் தொடர்பாகவும் நாம் அப்போது விரிவான அறிக்கை ஒன்றை பிரேமதாசா அரசாங்கத்திற்குக் கொடுத்திருந்தோம்.

அதுமாத்திரமல்லாமல் அரசியல் சாசனத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய மாற்றங்கள் தொடர்பாகவும் நாம் விளக்கமான ஒரு அறிக்கையைக் கொடுத்திருந்தோம். இன்று முன்வைக்கப்பட்டிருக்கும் அதிகாரப் பகிர்வு தொடர்பான ஆவணத்தில் இவற்றில் பெரும்பகுதி உள்ளடக்கப்பட்டிருந்தாலும் இன்னும் பல விடயங்கள் விடுபட்டிருக்கின்றது என்பதை நாம் உங்களுக்கு தெரிவிக்க வேண்டும்.

ஜனாதிபதி சந்திரிகா அவர்களால் முன்வைக்கப்பட்ட தீர்வு தொடர்பான ஆவணத்தில் அதிகாரப்பகிர்வு தொடர்பாக மிகவும் விளக்கமாக குறிக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் அதிகாரப் பகிர்விற்கான அலகு தொடர்பான அதாவது எமது மாகாணசபைக்கான எல்லை வரையறை தொடர்பாக எல்லைகள் மீள வகுக்கப்படும் என குறிக்கப்பட்டுள்ளதே தவிர அது எவ்வாறு என்ற விடயம் அதில் இல்லை.

ஈ.பி.ஆர்.எல்.எஃப் தூதுக்குழு 4ம் திகதி ஆகஸ்ட் மாதம் ஜனாதிபதி அவர்களை சந்தித்தபோது இக்குறைபாட்டினை சுட்டிக் காட்டினோம். ஆனால் அவரிடம் இதற்கான திடமான பதில் இருக்கவில்லை.

**ஒருபக்கத்தில் அரசாங்கத்தின் முழுமையற்ற தீர்வுத் திட்டம், மறுபக்கத்தில் தமிழ்க் கட்சிகளின் ஒற்றுமையின்மை... இவை நிச்சயமாக தமிழ் மக்களை பேரழிவிற்குள் கொண்டுபோய் விடும் என்பதை மறக்கலாகாது.**

கொழும்பு அரசியல் மேல்மட்டங்களின் செய்திகளின் பிரகாரம் பல ஊகங்கள் வெளிப் படுத்தப்பட்டுள்ளன. அம்பாறை மாவட்டத்திற்கு தனி மாகாணசபை, வடமாகாணத்திற்கு தனி மாகாணசபை, திருகோணமலை, மட்டக்களப்பிற்கு தனி மாகாணசபை இவ்வாறு வட–கிழக்கை சிதறடிப்பது என்ற போக்கும் இருப்பதாகத் தோன்றுகின்றது.

இந்திய–இலங்கை ஒப்பந்தத்தின் பிரகாரம் வட–கிழக்கு மாகாணங்கள் தற்காலிகமாகவேனும் இணைக்கப்பட்டு ஓர் மாகாண சபை உருவாக்கப்பட்டது. 1987ம் ஆண்டு இணைக்கப்பட்ட இம் மாகாணங்கள் இன்று எட்டு வருடங்களுக்கு மேலாக இணைக்கப் பட்ட மாகாணமாகவே இருந்து வருகின்றது.

**மிக அதிகளவில் அதிகாரங்களைக் கொடுத்த சந்திரிகா அரசாங்கம் வட–கிழக்கு இணைப்பை அகற்றிவிடுமோ என ஐயுற வேண்டியுள்ளது.**

தமிழ் கட்சிகளின் வேண்டுதலால் சிங்களக் கட்சிகள் முழுமையாக எதிர்த்தபோதிலும் கூட இந்திய அரசாங்கம் வட–கிழக்கு இணைக்கப்படுவதில் உறுதியாக இருந்தது. மிக அதிகளவில் அதிகாரங்களைக் கொடுத்த சந்திரிகா அரசாங்கம் வட–கிழக்கு இணைப்பை அகற்றிவிடுமோ என ஐயுற வேண்டியுள்ளது.

இவை தொடர்பாக தமிழ் மக்களின் குரலை ஒருமித்த வடிவில் கொடுப்பதற்கு தமிழ்க் கட்சிகளும் தயாராகவில்லை.

அண்மையில் தீர்வுத் திட்டம் தொடர்பாக தமிழ் மக்களின் ஏகோபித்த கருத்தினை அரசாங்கத்திற்கு சொல்வதற்கும், கொழும்பில் தமிழ் இளைஞர்கள் காணாமல் போவதை உடன் நிறுத்துவதற்கும், வடகிழக்கில் விமானக்குண்டு வீச்சுக்களையும், செல்வீச்சுக்களையும் நிறுத்துவதற்குமான ஒருமுகப்பட்ட கருத்தினை ஏற்படுத்துவதற்காக தமிழ்க் கட்சிகள் மத்தியில் ஓர் ஆலோசனைக் கூட்டத்தை நடாத்துவதற்கு ஈ.பி.ஆர்.எல்.எஃப் முயற்சி செய்தது.

ஏனைய எந்தவொரு கட்சியும் இப்படியானவொரு கூட்டத்தையும் கூட்டுவதற்கு முயற்சி செய்யாமையினாலேயே ஈ.பி.ஆர்.எல்.எஃப் அம்முயற்சியில் இறங்கியது. புளொட் தலைவர் சித்தார்த்தனும், ஈரோசும் உடனடியாகவே இதனை வரவேற்று ஒத்துழைப்பு தந்தனர்.

ஆனால் ஈ.பி.டி.பி.யினரைப் பொறுத்த வரையில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி ஆரம்பிக்கும் இப்படியான கூட்டங்களில் தங்களால் பங்குபற்றமுடியாது எனக் கூறினர்.

தமிழர் விடுதலைக் கூட்டணி இக் கூட்டத்தில் பங்குபற்றுவதா இல்லையா என்பது பற்றி தனது உயர் குழுவைக் கூடி ஆலோசனை செய்தது. ஆனால் எடுத்த முடிவினை அவர்கள் எமக்கு அனுப்ப வேண்டும் என்று கூட யோசிக்கவில்லை. ஆனால் பத்திரிகையாளருக்கூடாக அவர்கள் கலந்து கொள்ள மாட்டார்கள் என்று அறிந்தோம்.

இதனைப் போன்றே ரெலோவும் கூட, தனது ஆலோசரான சிறிகாந்தா அவர்களிடம் பேசி முடிவு சொல்வதாக கூறியிருந்தும், அவர்களிடமிருந்தும் பதில் கிடைக்க வில்லை.

மொத்தத்தில் தமிழ்க் கட்சிகள் ஒருமித்த குரலில் அரசாங்கத்துடன் பேசுவதென்பது இயலாத காரியமாகவே உள்ளது. இதனால் அரசாங்கம் தமிழ்க் கட்சிகளை தனது விருப்பத்திற்கேற்ப நடத்தும் போக்கே கூடுதலாகவுள்ளது.

## அன்பார்ந்த தமிழ் மக்களே!

ஒருபக்கத்தில் அரசாங்கத்தின் முழுமையற்ற தீர்வுத் திட்டம், மறுபக்கத்தில் தமிழ்க் கட்சிகளின் ஒற்றுமையின்மை... இவை நிச்சயமாக தமிழ் மக்களை பேரழிவுக்குள் கொண்டு போய்விடும் என்பதை மறந்துவிடக் கூடாது.

சில சலுகைகளுக்காக உரிமைகளை விட்டுக்கொடுக்கும் போக்கே இன்று அதிகமாகத் தென்படுகின்றது. அரசாங்கம் தனது தரப்பில் அதிகப்படியான ஓர் ஆசனத்தையே கொண்டுள்ளது. இதனால் தமிழ்க் கட்சிகளின் வாக்குகளை தன்பக்கம் வைத்திருக்க வேண்டும் என்பதில் அரசாங்கம் அக்கறை கொண்டுள்ளது.

இதனால் பாராளுமன்றக் கட்சிகள் சில சலுகைகளுக்காக தமது வாக்குகளை பேரம் பேசும் நிலையே இன்றுள்ளது. இது தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுத்துக் கொள்ள ஆரோக்கியமாக இருக்காது.

எனவே, தமிழ் மக்களின் உரிமைகளை முழுமையாக வென்றெடுக்கப்படுவதைக் கருத்தில் கொண்டு குறைந்தபட்சம் அவ் விடயங்களிலாவது தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைய வேண்டும். நீங்கள் தெரிவு செய்த கட்சிகளுக்கும் இயக்கங்களுக்கும் நீங்களே இதன் தேவையை விளங்கவைக்க வேண்டும்.

●



## போகிற போக்கில்....

இந்தவாரம் சாதாரணமாக இருவர் சந்தித்தால கூடப்பிறந்த சொந்தத்தை விசாரிப்பதுபோல் எப்படி "அரசியற் தீர்வு" என்பதுதான் வாயில் அடிபட்ட வார்த்தை. நமக்கும் சொல்லி அலுத்துவிட்டது. ஒருதடவை எச்சரிக்கையாக நானே முந்திவிட்டேன். வந்த நண்பரிடம் "எப்படித்தீர்வு" என்றேன். அரசுக்கு வெளிநாட்டிலிருந்து ஆயுதங்கள் வர கொஞ்சம் லேற் ஆகுமாம். இடையில் இந்த பீரியட்டை சமாளிக்க இந்த சொலூசன் என்றார். நமக்குரிய சந்தேகத்தில் "புலிகளும் இதைத்தானா...." என்று இழுத்தேன் "அவர்களும் ஏற்கனவே ரெடியாகத்தானே பிள்ளைகளைப் பிடித்து பயிற்சி கொடுக்கிறான்கள். அதே போலத்தான் அரசாங்கமும் கட்டாய இராணுவ சேவைக்கு ஆட்களைக் கூப் பிடலாம் என்று அறிவிச்சிருக்கு" என்றார். தீர்வை ஏற்றுக்கொள்ளாவிட்டால் புலிகளுடன்தான் யுத்தம். மக்களுடன் அல்ல என்றுதானே அரசாங்கம் கூறுகிறது என்றேன். 'யுத்தம்தான் நிரந்தரம் சமாதானமல்ல. இதுதான் புலிகளுக்கும் தேவை' என்றார். நானும் விடவில்லை. சரி புலிகளும் யுத்தத்தை தொடங்கினால் அரசாங்கமும் யுத்தத்தை விரும்பினால் நீங்கள்....என்றேன் 'ஒண்டும் வேணாம் உடுங்கடா' என்று ஆராவது தொடங்கினால் மெம்பராய்ச் சேருவேன் என்றார்.

– சோலையூரான்

படிப்பகம்

www.padippakam.com



இனப்பிரச்சினை:

# ஈ.பி.ஆர்.எல்.எஃப். இன் அரசியல் தூரநோக்கும்; சிறுபான்மையினர் தீர்வு தொடர்பாக அரசியற் கட்சிகளின் இன்றைய நிலைப்பாடுகளும்

க. சர்வேஸ்வரன்

இலங்கைத் தமிழ் மக்களுக்கும், ஏனைய சிறுபான்மை மக்களுக்கும் எதிராக ஏறத்தாழ ஐந்து தசாப்தங்களாக தொடர்ந்து வந்த அரசின் ஒடுக்கு முறைகள் முடிவுக்கு வரும் அறிகுறிக்ள் தோன்றியுள்ளன.

இந்நாட்டின் சிறுபான்மை மக்களாகிய வட-கிழக்கு தமிழ் மக்கள், மலையகத் தமிழ் மக்கள், முஸ்லீம் மக்கள் என அனைத்துத் தரப்பினரதும் பிரச்சினைகளும் அதற்கான தீர்வுகளும் தொடர்பாக, அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாகக் கூறிய தலைவர்கள் நிரந்தரத் தீர்வை நோக்கிய உருப்படியான திட்டங்கள் எதனையும் வைத்து அதற்காகப் போராடத் தவறிவிட்டனர்.

மாறாக, அன்றாடப் பிரச்சினைகட்கும், தற்காலிக திருப்திப்படுத்தலை செய்வதிலுமே பெரும்பாலும் தமது சக்தியைச் செலவிட்டனர். ஒன்றுபட்டு செயற்பட்டு நிரந்தரத் தீர்வை நோக்கி முன்னேற வாய்த்த சந்தர்ப்பங்களையும் தமது குறுகிய அரசியல் லாபங்கட்காகவும் சொந்த நலன்களுக்காகவும் தவிர்த்தே வந்தனர்.

## ஈ.பி.ஆர்.எல்.எஃப். இன் பாத்திரம்

இவ்வகையில் இந்நாட்டின் சிறுபான்மை மக்களின் பிரச்சினைகட்கு, நியாயமானதும் ஏற்றுக்கொள்ளக்கூடியதுமான நிரந்தரத் தீர்வை முன்வைத்து தொடர்ந்து செயலாற்றிய அரசியற்சக்தி என்ற வகையில் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி வயதில் இளமையானதாக இருந்தாலும் அரசியற் சிந்தனையில் மிகுந்த முதிர்ச்சியுடன் செயற்பட்டமையையும்; செயற்பட்டு வருவதையும் இன்றைய அரசியல் யதார்த்தங்கள் தெளிவாக வெளிப்படுத்தி நிற்கின்றன.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி முன்னர் ஆயுதப் போராட்டத்திலும் ஈடுபட்ட காரணத்தால் ஏனைய ஆயுதக் குழுக்களைப்போலவே இதுவும் ஓர் வெறும் பிரிவினைவாத இயக்கம் என்றே தவறாகவும் பரவலாகவும் பிரச்சாரப்படுத்தப்பட்டது.

ஆனால் ஈ.பி.ஆர்.எல்.எஃப் ஆரம்பிக்கப்பட்ட 1981இல் அதன் அரசியற் திட்டத்தையும் தொடர்ந்து 1984இல் அதன் இரண்டாவது காங்கிரஸில் நிறைவேற்றப்பட்ட அரசியற் திட்டத்தையும், அவர்களின் அரசியல் நடைமுறையையும் தெளிவாக நோக்கும் எவரும் ஒன்றுபட்ட இலங்கைக்குள் அனைத்து இனமக்களும் தமது தனித்துவத்தையும், சுயகௌரவத்தையும் பேணும்வகையில் சகோதரத்துவமிக்க ஓர் பல்லின, பலமத, பல கலாச்சாரத்தை வெளிப்படுத்தும் உறுதியான தேசத்தைக் கட்டியெழுப்வதையே தனது இறுதிக் குறிக்கோளாகக் கொண்டு செயற்பட்டதைக் காணமுடியும்.

இவ்வகையிலான அரசியற் குறிக்கோளுடனான ஆயுதப்போராட்டத்தின் அனுபவமும் முதிர்ச்சியுமே 1990 இல் இலங்கையின் இனப்பிரச்சினைகளை முடிவுக்கு கொண்டுவந்து இலங்கையில் சகோதரத்துவமும், சமத்துவமுமிக்க பல்லின சமுதாயத்தைக் கட்டியெழுப்பும் நோக்குடனான, ஈ.பி.ஆர்.எல்.எஃப் முன்வைத்த 19 அம்சத் திட்டத்தில் வெளிப்பட்டு நிற்கின்றது.

## தீக்கோழிகளாய் 45 ஆண்டுகள்

இன ஒடுக்குமுறைக்கெதிராக தமிழ் மக்கள் ஜனநாயகப் போராட்டங்களும், பின்னர் ஆயுதப் போராட்டமும் நடத்தி பிரச்சினைக்கு அரசியற் தீர்வைக் கோரியபோது, கடந்தகால ஆட்சியாளர்களிற் சிலர் 'தமிழர்களுக்கு பிரச்சினையே இல்லை' எனவும், மற்றும் சிலர் 'இது பௌத்த சிங்கள நாடு; அவர்கள் குருவிச்சை போல் எம்மை அண்டி வாழ விரும்பினால் வாழலாம்; அவர்கட்கு தனித்துவமெல்லாம் கிடையாது' எனவும் வியாக்கியானம் செய்த நிலைமை மாறி இன்று சிங்கள அரசியற் தலைமைகளிடமும் மக்களிடமும் குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்பட்டிருப்பதைக் காணமுடிகிறது.

குறிப்பாக இன்றைய அரசு, இன்று வளர்ந்துள்ள இனப்பிரச்சினைக்கு முன்னைய அரசுகளின் தவறான அணுகுமுறையே காரணம் என்பதையும், தமிழ் மக்கள் இரண்டாந்தரப் பிரஜைகளாக நடாத்தப்பட்டார்கள் என்பதையும் பகிரங்கமாக ஏற்று, தமிழ் மக்களுக்கான உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என்ற முடிவுக்கு இன்று வந்துள்ளனர்.

இதைப்புரிந்துகொள்வதற்கும், பகிரங்கமாக ஏற்றுக் கொள்வதற்கும், அதனை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கவும் 45 ஆண்டு காலம் எடுத்தது. மாபெரும் அழிவுகளின் பின்னரே இது உணரப்பட்டது. இப்பிரச்சினையின் ஆழத்தினை முன்னுணர்ந்திருந்தால், தீர்வினை முன்பேவைத்திருந்தால் இத்தகைய யுத்தமும் பேரழிவும் ஏற்பட்டிருக்காது.

## தேவை: விசாலித்த பார்வை

45 ஆண்டு கால நீண்ட போராட்டம், கடும் அழிவுகள் ஆகியவற்றின் பின்னர் வடக்கு கிழக்கு தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வுபற்றி அரசு பேசும்போது, ஏனைய சிறுபான்மை மக்களாகிய மலையகத்தமிழ் மக்கள், முஸ்லீம்கள் ஆகியோரின் பிரச்சினைகட்கும் முடிவுகட்டக்கூடிய ஓர் பரந்த தீர்வினை முன்வைப்பதே புத்திபூர்வமானதாக இருக்கும்.

மாறாக, இவர்களும் போராட்டங்களை நடத்தி, அதன்மூலம் அழிவுகள் ஏற்பட்ட பின்னர்தான் அதற்குத் தீர்வை யோசிப்பது என அரசோ, சிங்கள தேசியவாதிகளோ சிந்திப்பார்களாயின்

> அரசியற் குறிக்கோளுடனான ஆயுதப் போராட்டத்தின் அனுபவமும் முதிர்ச்சியுமே 1990இல் இலங்கையின் இனப்பிரச்சினைகளை முடிவுக்கு கொண்டுவந்து இலங்கையில் சகோதரத்துவமும், சமத்துவமுமிக்க பல்லின சமுதாயத்தைக் கட்டியெழுப்பும் நோக்குடனான ஈ.பி.ஆர்.எல்.எஃப் இன் 19 அம்சத் திட்டத்தில் வெளிப்பட்டு நிற்கின்றது.

அவர்கள் படித்துத் திருந்தாத, பார்த்துத் திருந்தாத, ஆனால் பட்டுத் திருந்தும் மூன்றாம்வகை அரசியல் வாதிகளாகவே இருக்கமுடியும்.

எவரையும் எவரும் ஒடுக்காத சகோதரத்துவமிக்க தேசத்தை இத் தீவிற் கட்டியெழுப்பும் அகன்ற பார்வையை யாரும் கொண்டிருக்கவில்லையா? என்று நோக்கின்... வரிக்கு வரி தேசிய ஐக்கியம் பேசும் கட்சிகளல்ல, கம்யூனிசம் பேசும் கட்சிகளல்ல, தமிழீழம் பேசும் கட்சிகளுமல்ல... மாறாக, பிரிவினைவாதிகள், என்று கொச்சைத்தனமாக முத்திரை குத்தப்பட்ட ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி 89/90ம் ஆண்டுகளிலேயே இதற்கு தெளிவான தீர்வை முன்வைத்திருந்தது.

## மாகாண அளவில் உத்தரவாதம் மலையகத் தமிழர் பிரச்சினை

150 ஆண்டுகளுக்கு முன்னால் வெள்ளையரால் இலங்கையில் குடியேற்றப்பட்டு இன்றுவரை இந்நாட்டின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாய் இருந்து முதுகு வளைந்திருக்கும் மலையகத் தமிழ் மக்களே இலங்கையின் அரசியல், பொருளாதார, சமூக உரிமைகளில் மிகவும் பின்தள்ளப்பட்டவர்களாவர்.

1948இலேயே அவர்களது பிரஜாவுரிமையைப் பறித்ததன் மூலம் சிங்கள இனவெறி அவர்களை நடைப்பிணமாக்கிவிட்டது; இன்றுவரை இந்நாட்டில் மனிதர்களாகவே அவர்கள்கருதப்படுவதில்லை.

இலங்கைத் தமிழர் பிரச்சினை என்பது வெறும் வடக்குக் கிழக்குத் தமிழர் பிரச்சினை மட்டுமல்ல, அது மலையக மக்களையும் உள்ளடக்கியதுதான் என்பதை உயர்த்திப் பிடித்தது ஈ.பி.ஆர்.எல்.எஃப்.

இதன் அடிப்படையில் மலையக மக்களின் தனித்துவத்தையும் உயர்ச்சியையும் நோக்கமாகக் கொண்டே மலையக இளைஞர்கள் மத்தியிலும் அவர்களது வேலை அமைந்தது. ஏற்கனவே மலையகத்தைப் பிரதிநிதித்துவப் படுத்துவதாகக் கூறும் ஏமாற்றுத் தலைமைகளைப் புறந்தள்ளி துடிப்புமிக்க புதிய தலைமை எழுந்துவிடும் என்ற குறுகிய நோக்கில் அவ் வேலைகள் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் உதவியுடன் முரட்டுத்தனமாக அடக்கப்பட்டன.

## மனிதர்களாய்க் கருதாத மந்திரிகள்

1985இல் திம்பு பேச்சுவார்த்தையில் மலையகத் தமிழ்மக்கள் பற்றிப்பேசும்போது இலங்கை அரசுப் பிரதிநிதிகள் 'நீங்கள் அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தவில்லை, எனவே அது பற்றி வட-கிழக்குத் தமிழ் தலைமைகள் பேச வேண்டியதில்லை' எனக் கூறப்பட்டது.

ஆனால் அவர்களின் பிரதிநிதிகள் என ஏற்றுக் கொள்ளப்பட்டவர்கள் அன்றைய அரசில் 17 ஆண்டு காலம் அங்கம் வகித்த போதும் இந்த மக்களைக் குறைந்தபட்சம் மனிதர்களாக கணித்து செயற்படும் நிலைக்கேனும் உயர்த்தவில்லை. இன்றும் அவர்களின் பிறப்பு இறப்புக்களைக்கூட பதிவு செய்யப்படாத, பதிவுசெய்யமுடியாத நிலமைகள் கூட தொடர்கின்றன என்பதே இதற்குச் சான்று.

## 19 அம்சத் திட்டத்தில்...

இலங்கையில் இனப்பிரச்சினை, சிறுபான்மை மக்கள் பிரச்சினை நிரந்தரமாகத் தீர்க்கப்பட, ஈ.பி.ஆர்.எல்.எஃப். முன்வைத்த 19 அம்சத் திட்டத்தில் மலையக மக்களுக்கான தீர்வைத் தெளிவாக வலியுறுத்தி உள்ளது.

"மலையகத்தில் வாழும் தமிழர்கள் சிறீலங்கா அரசினதும், சிங்கள இனவெறியர்களினதும் அடக்குமுறைகளுக்கும், ஒடுக்குமுறைகட்கும் கடந்த 40 ஆண்டுகளுக்கு மேலாக முகங்கொடுத்து வருகின்றனர். இவர்களில் 5 லட்சத்திற்கு மேற்பட்டவர்கள் ஏற்கனவே இந்தியாவுக்கு நாடுகடத்தப்பட்டுள்ளனர். எஞ்சியிருப்பவர்களோ எதிர்காலம் உறுதியற்ற நிலையில் வாழ்ந்துகொண்டிருக்கின்றனர். பொருளாதாரச் சுரண்டல்கள், புறக்கணிப்புக்கள், சிங்களக் குடியேற்றத் திட்டங்கள், சிங்கள இனவெறியர்களின் பலாத்காரமான கெடுபிடிகள் என்பவற்றுக்கு மத்தியில் அரசியல் அனாதைகளாக்கப்பட்டுள்ளனர். இந்நிலைமையை மாற்றுவதற்கு மலையகத்தில் மலையகத் தமிழர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட வகையில் புதிய மாகாணமும், மாகாண அரசும் உருவாக்கப்பட வேண்டும்" எனவும், இவ்வரசானது ஆகக் குறைந்தபட்சமாக பொருளாதார உரிமைகள், அடிப்படை அரசியல் உரிமைகள், சமய கலாச்சார உரிமைகள், கல்வி, வேலைவாய்ப்பு, மற்றும் சமூகநலன்கள் ஆகியவற்றைப் பாதுகாக்கக்கூடிய வகையில் தீர்மானமெடுக்கும் அதிகாரங்கள் கொண்டதாக இருக்க வேண்டும் என்றும் தெளிவாகக் குறிப்பிடுகிறது.

இந்த 19அம்சத் தீர்வுத் திட்டத்தை வரவேற்பதற்கோ ஆதரிப்பதற்கோ பதிலாக இதனை வலியுறுத்தியவர்கள் மீது அன்றைய அரசும், சில இனவாத அரசியற் சக்திகளும் சேறடிக்கும் பிரச்சாரத்தையே மேற்கொண்டன.

## மௌனம் கலைந்த தலைவர்கள்

மலையக மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாகக் கூறியவர்கள், இத்திட்டம் தொடர்பாக இன்றுவரை மௌனமே சாதித்தனர். இன்று, இனப்பிரச்சினைக்கான அரசியற் தீர்வின் ஓர் பகுதியான அதிகாரப் பகிர்வு யோசனைகளை ஜனாதிபதி வெளியிட்ட போதுதான், தமது மௌனத்தின் தவறைப் புரிந்துகொண்டவர்களாக, தூக்கத்திலிருந்து விடுபட்டவர்களாக மலையக மக்கள் முன்னணித் தலைவர் பொத்தாம் பொதுவில் "மலையக மக்களுக்கும் உரிமை வழங்க வேண்டும்" எனக் கூறியுள்ளார்.

இவ்வாறு மலையக மக்களின் உரிமைகள் அரசியல் சாசனத்தில் இடம்பெற வேண்டுமென இவர் முதலில் கூறிவிட்டதால், தான் மக்கள்மீது அக்கறை இல்லாதவன் என யாரும் நினைத்துவிடக்கூடாது என்பதற்காக தொண்டமானும் பின் னர் கருத்துக் கூறினார்.

அவரது கூற்று சற்று காத்திரமாகவும் அர்த்தமுள்ளதாகவும் அமைந்துள்ளது. "இந்நாடு சுதந்திரமடைந்த பின் வட-கிழக்கில் குடியேற்றப்பட்ட சிங்கள மக்களைப் பாதுகாக்க மாகாண மாவட்ட எல்லைகளை மீள் வரைவு செய்யமுடியுமென்றால்... 150 ஆண்டுகளாக அடிமைப்பட்டுக் கிடக்கும் மலையக மக்களுக்கு குறிப்பிட்ட எல்லைகளை வகுத்து அதிகாரம் தந்தால் என்ன?" என்று 'சுருக்' எனக் கேட்டிருக்கிறார்.

நாணிக்கோணி, மிண்டிவிழுங்கி மலையக மக்களுக்காக இவர்கள் இன்றுதான் இத்தகைய நிரந்தரத் தீர்வு வேண்டும் என்ற நோக்கில் வாயைத் திறக்கிறார்கள் என்னும் போது ஒருபுறம் சிரிக்கத் தோன்றினாலும், "என்றைக்குமே செய்யாதிருப்பதைவிட சற்று காலம்தாழ்த்தியாவது செய்வது சிறந்தது" என்னும் ஆங்கிலப் பழமொழியே ஞாபகத்திற்கு வருகிறது.

## கோரிக்கைக்கு வலு கொடுங்கள்

1981இலிருந்தே இலங்கையிலிருந்து நாடுகடத்தப்பட்டு தமிழ் நாட்டில் அல்லலுறும் மலையகத் தமிழ் மக்களின் நலன்களுக்காகவும் ஈ.பி.ஆர்.எல்.எஃப். முயற்சி எடுத்துவந்துள்ளது. இலங்கை அரசுமீது நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தி இத் திட்டத்தின் அடிப்படையில் தீர்வு காண வேண்டும் என்பதற்காக, 1990 இல் இத்திட்டம் அரசுக்கும், அனைத்து அரசியற் தலைவர்கட்கும், பத்திரிகைகட்கும், ராஜ தந்திரிகட்கும் கொடுக்கப்பட்டது. ☞

படிப்பகம்

www.padippakam.com



ஆனால் இதுபற்றிப் பேசியிருக்க வேண்டிய தலைவர்கள் பலர் அன்றைய அடக்குமுறை ஆட்சியின் கீழ் பயந்திருந்தனர். இத்திட்டத்தை ஏற்றுக் கொள்ள வைத்துவிட்டால் தமது தலைமைத்துவத்திற்கு மரியாதைகுறைந்துவிடும் ஈ.பி.ஆர்.எல்.எஃ.ப்பிற்கு மதிப்பு உயர்ந்துவிடும் என்ற குறுகிய நோக்கில் இதனை கண்டு கொள்ளாமல் இருந்தவர்கள் சிலர், இதன் முக்கியத்துவத்தினை முன்னெடுத்து, அதற்கு ஆதரவான மக்கள் கருத்தை உருவாக்குவதில் பங்களிப்புச் செய்யத் தவறியும் விட்டனர்.

எனவே, நீண்டகாலமாக ஈ.பி.ஆர்.எல்.எஃப் முன்னெடுத்துவரும் இக் கோரிக்கை வெற்றிபெற, இன்றாவது சம்பந்தப்பட்ட கட்சிகளும் தலைமைகளும் மக்கள் நலன்கருதி இணைந்து செயற்பட்டு இவற்றை நடைமுறைச் சாத்தியமானதாக்க முன்வர வேண்டும்.

## முஸ்லீம் மக்கள் பிரச்சினை

தமிழ் மக்கள் போன்றே பல்வேறு வகைகளிலும், முஸ்லீம் மக்களும் மத்திய அரசின் இனவெறிக் கொள்கைகளால் தொடர்ந்து பாதிக்கப்பட்டே வந்தனர்.

கிழக்கில் அம்பாறை போன்ற பகுதிகளில் முஸ்லீம் மக்கள் தமது விவசாய நிலங்களிலிருந்தே விரட்டியடிக்கப்பட்டு, அரசின் திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்கள் நடத்தப்பட்டன. தமிழ், முஸ்லீம் மக்களின் நிலங்களே பலாத்காரமாக சுவீகரம் செய்யப்பட்டன.

இதன்மூலம் அவர்கள் வாழும் பகுதிகளிலேயே அவர்களின் அரசியற் பிரதிநிதித்துவமும் பறிக்கப்பட்டது அல்லது குறைக்கப்பட்டது.

பலதடவைகள் பள்ளிவாசல்களிலேயே அரசபடைகளால் சுடப்பட்டனர். அன்றைய தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் இதற்கெதிராக குரலெழுப்பியபோதும், தமது குறுகிய அரசியல் நலன்களுக்காக அன்றைய முஸ்லீம் தலைவர்கள் இவற்றுக்கெதிராகப் போராடவில்லை என்பதுடன், இதற்காகக் குரலெழுப்பிய தமிழ்த் தலைவர்கட்கு இவ்விடயத்தில் ஆதரவளிக்கவும் தவறினர்.

இவற்றுக்கு மேலாக, பாராளுமன்ற கதிரைகளுக்காக அவ்வப்போது தமிழ், முஸ்லீம் பேதங்களை வளர்க்கும் பேச்சுக்கள் மூலம் ஒற்றுமையைக் குலைத்து ஒடுக்குமுறையாளருக்குத் துணைபோயினர்.

இவ் ஒடுக்குமுறைக்கெதிராக ஒன்றுபட்டுக் குரல் கொடுப்பதன் மூலமே, முஸ்லீம் சமூகத்தின் மத,கலாச்சாரவிழுமியங்கள் பாதுகாக்கப்படவும்,அவர்களின் அரசியற்பொருளாதார வாய்ப்புகள் பாதுகாக்கப்படவும் முடியும்.

இதற்கு மாறாக தமிழ் இன ஒடுக்குமுறைக்கெதிரான போராட்டத்தைப் பலவீனப்படுத்த முஸ்லீம் மக்களைத் தமது பக்கம் திருப்ப முனையும், அரசின் பிரித்தாளும் சூழ்ச்சிக்கு அவர்கள் ஓரளவு பலியாகிவிட்டதுடன், சிறிலங்கா முஸ்லீம் காங்கிரசின் அண்மைய தீர்மானமான, தென்கிழக்கு மாநிலக் கவுன்சில் என்ற கோரிக்கைக்கு முன்னர், மலையகத் தலைவர்களைப் போலவே தமது பிரச்சினை தொடர்பான நிரந்தர தீர்வுகளை முன்வைக்கத் தவறிவிட்டனர்.

## முஸ்லிம் தன்னாட்சி அலகு

ஆனால் இனப்பிரச்சினையை வெறும் குறுகிய குழுவாத அல்லது சமூகவாதக் கண்ணோட்டத்தில் பார்க்காது தேசிய, சர்வதேசியக் கண்ணோட்டத்திலேயே ஆய்வு செய்து, அதன் அடிப்படையிலேயே தனது அரசியற் திட்டத்தை முன்வைத்து தீர்வுக்காகப் போராடிய ஈழ மக்கள் புரட்சிகரவிடுதலை முன்னணி முஸ்லீம் மக்களின் தனித்துவத்தையும் அதன் ஆரம்பம் முதலே ஏற்றுச் செயற்பட்டது.

அவை பேணப்படுவதற்கான உத்தரவாதமளிக்கக்கூடிய ஓர் தன்னாட்சி அமைப்பு வட–கிழக்கு மாகாண அலகுக்குள் ஏற்படுத்த வேண்டும் என்பதை 87 இன் பின்னால் வலியுறுத்தி வந்தது. இதன் வளர்ச்சியே 1990இல் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு முன்வைத்த 19அம்சத் திட்டத்தில் இஸ்லாமியத் தமிழர் பிரச்சினைக்கும் தீர்வை முன்வைத்தது.

அதில், "கல்முனை, சம்மாந்துறை, அக்கரைப்பற்று ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய முஸ்லீம்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட மாகாணத்தை உருவாக்க தமிழ் மக்கள் ஒத்துழைப்பு வழங்குவர். இம்மாகாணம் ஆகக் குறைந்தபட்சம் நில உரிமை, பொருளாதார உரிமைகள், சமய கலாச்சார உரிமைகள், கல்வி, வேலைவாய்ப்பு, சமூக நலன்கள் ஆகியவற்றைப் பாதுகாக்கக் கூடிய வகையில் தீர்மானிக்கும் அதிகாரங்கள் கொண்டதாக அமையவேண்டும்" என்று குறிப்பிடுகிறது.

> மிகுந்த அரசியற் தூரநோக்குடன் ஈபிஆர்எல்எஃப் முன்வைத்து வந்த தீர்வுயோசனைகள் இன்று அனைத்து அரசியற் தரப்பினராலும் ஏற்றுக்கொள்ளும் நிலைக்கு வந்ததானது ஈபிஆர்எல்எஃப் இன் அரசியல் வெற்றியேயாகும்.

இதன் மூலகர்த்தாவாக பத்மநாபாஅவர்கள் விளங்கினார். அவர் வழியில் ஈபிஆர்எல்எஃப் தொடர்ந்து இக்கோரிக்கையை முன்னெடுத்து வந்ததுடன், இதன் அடிப்படையில் நீண்ட காலமாக சாத்தியப்பாடான ஓர் முடிவை எட்டுவதற்கு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசுடன் பேசியும் வந்தது.

## மத்தியில் உத்தரவாதம்: சிறுபான்மையினர் நலன்கள் பாதுகாக்க பாராளுமன்றத்தில் இரண்டு சபைகள்

இனப்பிரச்சினை தீர்வுக்கு 1990இல் தனது விரிவான திட்டத்தில்.... மாகாண அல்லது பிராந்திய அளவில் சிறுபான்மை மக்கள் தமது நலன்களைப் பாதுகாக்க, வட–கிழக்கு மாகாண சபை, கிழக்கில் ஓர் முஸ்லீம் சபை, மலையகத்தில் ஓர் சபை என்ற தீர்வுகளை முன்வைத்த ஈபிஆர்எல்எஃப், மத்தியில் இவற்றை உத்தரவாதப்படுத்தி சிறுபான்மை மக்களின் நலன்களைப் பாதுகாக்கும் வகையில் பாராளுமன்றத்தில் இரண்டு சபைகள் தேவை என்பதை முன்வைத்தது.

19அம்சத் திட்டத்தில் 10வது அம்சமான "இலங்கையில் சிங்கள மக்கள் 73சத விகிதத்தினராக இருப்பதால் பாராளுமன்ற முறையைப் பயன்படுத்தி தமிழ் பேசும் மக்களின் அரசியல், பொருளாதார உரிமைகளைப் பறித்தல் என்பது இலங்கையின் அரசியல் வரலாற்றில் சகஜமாகிப்போய்விட்ட ஓர் விடயமாகும். இந்நிலமை இனியும் தொடரக்கூடாது.

ஆகவே பாராளுமன்றத்தில் அடுத்ததாக, இலங்கையிலுள்ள சிறுபான்மை இனங்களின் அரசியல், பொருளாதார, கலாச்சாரப் பாதுகாப்பு உரிமைகளையும் நலன்களையும் பாதுகாப்பதற்காக இனங்களின் சமத்துவ பிரதிநிதித்துவத்தைக் கொண்ட இரண்டாவது சபை ஒன்று பாராளுமன்றத்தின் இனவிரோத சட்டவாக்கங்களைத் தடைசெய்யும் வகையில் உருவாக்கப்படல் வேண்டும்" என்று கூறுகிறது.

## ஆயுதப்படையில் இனவிகிதாசாரம்

19அம்சத் திட்டத்தினைத் தவிர, இந்நாட்டு மக்களின் பாதுகாப்பினை உத்தரவாதப்படுத்தும் அடிப்படையில் அண்மைக் காலங்களில் பத்திரிகைகளில் ஓர் விடயம் ஒருசிலரால் வலியுறுத்தப்பட்டு வருகிறது. "பாதுகாப்புப் படையில் தமிழ்ப் படைப்பிரிவு ஒன்று இருக்க வேண்டும். 'சங்கிலியன்' படைப்பிரிவு என அதற்குப் பெயரிட வேண்டும்" என்பதே அதுவாகும்.

முன்னாள் வட–கிழக்கு மாகாண அரசின் முதல்வர், மத்திய அரசின் பாதுகாப்பு அமைச்சர் உள்ளிட்ட பாதுகாப்பு ஒருங்கிணைப்பு சபையில் 1990இல் ஈ.பி.ஆர்.எல்.எஃ.ப் இனால் முன்வைக்கப்பட்டு, படுகொலை செய்யப்பட்ட முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன உட்பட அனைத்து சபை உறுப்பினர்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டு கையெழுத்திடப்பட்ட விடயம்:

"இலங்கை இராணுவத்தை இலங்கையின் சனத்தொகை விகிதாசார அடிப்படையில் 3 ஆண்டுகட்குள் மாற்றியமைப்பது. இதன்மூலம் இன்று சிங்கள இராணுவமாக உள்ள படையை சிறிலங்கா இராணுவமாக்குவது. படிப்படியாக 3 ஆண்டுகளுக்குள் இதனை நிறைவேற்றுவது...." என்பதுடன், ஒவ்வோர் ஆண்டும் எவ்வளவு பேரை உள்வாங்குவது என்பதும் முடிவுசெய்யப்பட்டது.

இவ் விடயத்தில் ஈ.பி.ஆர்.எல்.எஃ.ப். தெளிவான சிந்தனையின் அடிப்படையில் செயற்பட்டது. இதேவிடயத்தை இன்று வலியுறுத்த விரும்பியவர்கள், தனித் தமிழ்ப் படைப்பிரிவு என்று மாற்றம் செய்து கோரியுள்ளனர்.

ஒரு நாட்டின் தேசிய இராணுவம் இனக் கண்ணோட்டம் உடையதாக இருக்கக் கூடாது. அவ்வாறு இருக்கும் நிலையை மாற்றும் ஓர் பகுதியாகவே, அதில் பல்லினத் தன்மை வெளிப்பட வேண்டும் என்பதாகவே ஈ.பி.ஆர்.எல்.எஃப். இன் திட்டம் அமைந்தது.

ஆனால் ஓர் சிங்களப் படைப்பிரிவு, ஓர் தமிழ்ப்படைப்பிரிவு என ஏற்படுத்துவது படைப்பிரிவுகட்கிடையே கூட பிரிவினையை ஏற்படுத்தும் என்பதுடன், தென்னிலங்கையில் ஓர் பிரச்சினையை அடக்க தமிழ்ப்படையும், வட–கிழக்கில் அடக்க சிங்களப் படையையும் பயன்படுத்தும் நிலையும், இதன்மூலம் இனபேதம் வளரவும் இது வாய்ப்பாகும்.

எனவே, தமக்கு தனியான கருத்து இருப்பதாக அல்லது புதிய கருத்தைச் சொல்லிவிட்டதாகக் காட்ட முற்பட்டு விடயங்களைக் கேலிக்குரியதாக்கும் நிலையை ஏற்படுத்திவிடக் கூடாது.

## உரிமைகளை வெல்ல ஒரே குரல்

மொத்தத்தில், இந்நாட்டின் தேசிய அரசியலில் எரியும் பிரச்சினையான சிறுபான்மையினர் தீர்வு தொடர்பாக இன்றைய ஜனநாயக உலகின் போக்கிற்கிணங்கவும், இச்சிறு தீவில் வளர்ந்துவரும் இனப் பகைமை அழிவுகளை நிறுத்தி ஓர் சமத்துவம், சகோதரத்துவம், ஐக்கியம் மிக்க இலங்கையைக் கட்டியெழுப்பவும் ஈபிஆர்எல்ஃப் மிகுந்த அரசியற் தூரநோக்குடன் முன்வைத்து வந்த தீர்வுயோசனைகள் இன்று அனைத்து அரசியற் தரப்பினராலும் ஏற்றுக்கொள்ளும் நிலைக்கு வந்ததானது ஈபிஆர்எல்எஃப் இன் அரசியல் வெற்றியேயாகும்.

இவை மாத்திரமல்லாமல் மாகாணசபைகளுக்கு இந்திய மாநிலங்களுக்கு இருக்கக்கூடியளவிலான அதிகாரங்கள் இருக்க வேண்டும் எனக் கோரியதுடன், இது தொடர்பாக 13வது திருத்தச் சட்டம் முழுமையாக மாற்றப்படவும், அரசியல் சாசனத்தில் செய்ய வேண்டிய மாற்றங்கள் தொடர்பாகவும் ஏறத்தாழ 75 பக்கங்களை உள்ளடக்கிய விரிவான அரசியற் சாசனத் திருத்தம் ஒன்றை ஈ.பி.ஆர்.எல்.எஃப். பிரேமதாசா அரசாங்கத்திற்கு அளித்திருந்தது.

இச் சிந்தனைகளின் மூலகர்த்தா தோழர் நாபா இன்று அதிக உயிர்ப்புடன் இருக்கிறார் என்பதே புரிந்துகொள்ளப் படுகிறது. தோழர் வாசுதேவ நாணயக்கார சொன்னது போல் "வரலாறு அவரை உயர்ந்த இடத்தில் வைக்கும்" என்பது நிரூபணமாகிறது.

இன்று அமைந்திருக்கும் புதிய அரசு இனப்பிரச்சினைக்கு ஓர் நிரந்தரத் தீர்வைக் காணும் உறுதியினைக் கொண்டுள்ளதென்பதனால், மேற்கண்ட மாநில அளவிலும், மத்தியிலும் சிறுபான்மை மக்கள் தமது உரிமைகளை உத்தரவாதப்படுத்திக் கொள்ள ஏதுவான திட்டங்களை இன்றேனும் ஒன்றிணைந்து ஒரே குரலில் பேசி நடைமுறைச் சாத்தியமாக்குவதே இந்நாட்டு மக்களுக்கு–குறிப்பாக சிறுபான்மை மக்களுக்கு அதன் தலைவர்கள் செய்யக் கூடிய மிக உயர்ந்த சேவையாக இருக்கும். ●

## கூட்டணியின் குறுகல் நோக்கு...

(....முன்பக்கத் தொடர்ச்சி)

இவர்களின் போராட்டம், இவர்களின் தியாகங்களால்தான் எமது பிரச்சினை சர்வதேச மட்டத்திற்குச் சென்றது. அதுமாத்திரம் அல்லாமல் பிரச்சினையின் முக்கியத்துவத்தையும் ஏனையோர் புரிந்துகொள்வதற்கான சூழ்நிலையையும் ஏற்படுத்தியது.

புலிகளால் போராட்டம் சீரழிந்து போனதும், தடுமாறிப்போனதும் உண்மை. ஆனால் புலிகள் உட்பட ஈ.பி.ஆர்.எல்.எஃப், ஈரோஸ், ரெலோ,புளொட்,ஆகிய போராளிகளின்தியாகங்கள்தான், அரசு இன்று இப்பிரச்சினைக்கு ஓர் அரசியல் தீர்வுகாணவேண்டும் என்ற நிலைக்கு வந்துள்ளதற்கான காரணமாகும்.

ஆனால், தமிழர் விடுதலைக் கூட்டணியைப் பொறுத்தவரை தம்மால் மாத்திரமே இத்தீர்வுகள் எட்டப்பட்டன என்கின்ற மாதிரியும், போராளிகளுக்கு எந்தப் பங்குமில்லை என்ற பாணியில் பேசியும், எழுதியும் வருகின்றனர். 50 ஆயிரத்திற்கு மேற்பட்ட பொதுமக்களினதும், போராளிகளினதும் தியாகத்தின் மத்தியிலேயே நாம் அதிகாரப் பகிர்வினை கோரிநிற்கின்றோம் என்பதை அவர்கள் மறந்து போகக்கூடாது.

தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும், அவர்களின் கோரிக்கைகள் அபிலாஷைகள் பூர்த்தியாக்கப்படல் வேண்டும் என எண்ணுகின்ற தமிழர் விடுதலைக் கூட்டணியினர் சில சமயங்களில் யதார்த்தத்தை விட்டுவிட்டுசிந்திப்பதும், செயற்படுவதும் வேதனைக்குரியதாகும்.அவர்களுக்குவிருப்பமிருக்கிறதோ இல்லையோ, தமிழ் மக்களின் நலன் கருதியேனும் ஐக்கியப்பட்டுச் செயற்படுவதன் அவசியத்தை அவர்கள் புறந்தள்ளக் கூடாதென்பதே எங்கள் பணிவான அபிப்பிராயம்.

தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ஏனைய பல தமிழ் கட்சிகளும் இயங்கி வருகின்றன என்பதை அவர்கள் மறந்து போகக்கூடாது. குறைந்தபட்சம் அரசியல் தீர்வுத்திட்டம் தொடர்பாக, நிர்வாக அலகு தொடர்பாக ஒருமித்த குரலில் தெரிவிப்பதற்காகவேனும் இவர்கள் கூட்டான சில முடிவுகளை எடுக்க வேண்டும்.

அதனைவிடுத்து ஒவ்வொரு கட்சிகளும் தனித்தனியாக் தமது கருத்துக்களைத் தெரிவிப்பதென்பது அரசாங்கத்திற்கு சாதகமாகவே முடியும்.

நீண்டகால அரசியல் பாரம்பரியம் உள்ள இக் கட்சியினர் சிறுபிள்ளைத்தனமான அறிக்கைகளையும் இடைக்கிடையே விடுகின்றனர். ஆயுதம் ஏந்திய குழுக்களுடன் தாம் இணைந்து செல்ல மாட்டோம், அவர்களுடன் கூட்டாக இருந்து ஆலோசிப்பது தீட்டானது என்ற பாணியிலேயே அவர்களது நடவடிக்கைகள் அமைந்து வருகின்றது.

நாம் முன்னரே கூறியதுபோன்று போராளிகளினதும் மக்களினதும் தியாகங்களை வைத்து இவர்கள் தம்து அரசியலை நடாத்துகின்றார்கள். ஆனால் அம்மக்களுக்கு ஒர் முழுமையான தீர்வினை எட்டுவதற்கு தமக்கு மத்தியில் ஒர் ஐக்கியத்தை உருவாக்குவதை விடுத்து ஏனைய குழுக்களுடன் பேசுவதென்பது மிகவும் இழுக்கானது என்ற ரீதியில் கூட்டணியினர் நடப்பதானது தமிழ் மக்களின் உரிமைகளை முழுமையாக வென்றெடுக்க உதவாது என்பதுடன் குறுகிய கட்சிநலன்களும், சுயநலன்களுமே இதில் தெளிவாகத் தெரிகின்றது.

அனுபவம் வாய்ந்த அரசியல்வாதிகள் என்ற அடிப்படையில் எல்லோரையும் இணைத்துச் செல்லவேண்டிய இவர்களே அதற்கு எதிராக நிற்பதானது தமிழ் மக்களின் சாபக்கேடாகும். அவர்களால் எல்லோரையும் இணைத்துச் செல்லமுடியாவிடினும் குறைந்தபட்சம் அப்படி முயற்சி செய்வோருக்கு ஒத்தாசையாகவாவது இருக்கலாம். அப்படியான முயற்சிகளை குழப்புபவர்களாகவே இவர்கள் உள்ளார்கள்.

தமிழ் மக்களின் நலன்களின் அடிப்படையிலிருந்தும், அவர்களது சுபீட்சமான எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டும் தமிழர் விடுதலைக் கூட்டணி தமது குறுகிய கட்சி நலன்களுக்கு அப்பாற்பட்டு தமிழ் மக்களுக்காக அவர்களது ஒட்டுமொத்த அபிலாஷைகளை வென்றெடுப்பதற்காக சிந்திக்கும் என்று எதிர்பார்க்கின்றோம்.

> நியாயங்களைக் காயப்படுத்தினாலும் பரவாயில்லை....
> காயங்களை நியாயப்படுத்தக் கூடாது. - அண்ணா

www.padippakam.com



# தமிழ்க் கட்சிகள் என்ன செய்யப் போகின்றன?

விதுரன்

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சியில் அதிகாரப் பகிர்வு பற்றிய அரசியல மைப்பு சீர்திருத்த முன்மொழிவுகளை ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்கா குமாரதுங்கா அவர்கள் வெளியிட்டுள்ளார். இந்த முன்மொழிவுகள் பரவலாக பலரது பாராட்டையும் பெற்றுள்ளது.

அரசியலமைப்பு சீர்திருத்த முன்மொழிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரப்பகிர்வு தொடர்பான யோசனைகள் இனப்பிரச்சினையை தீர்ப்பதற்காக இதற்கு முன்னர் தெரிவிக்கப்பட்ட யோசனைகளை விடவும் சிறந்தவை என்பதை மறுப்பதற்கில்லை.

ஆனால், இந்தத் தீர்வு யோசனைகள் அமுலாக்கம் பெறும் ஆள்புலம் பற்றிய வரையறை எதுவும் இன்னும் வெளியிடப்படாமையினால் வெகுஜன தொடர்பு சாதனங்களில் வியாக்கியானம் செய்யப்படுவது போன்று இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான பூரணமானதொரு தீர்வுத் திட்டமாக இதனைக் கொள்ளமுடியாது.

அமைக்கப்படவுள்ள பிராந்திய சபைகளில் ஒன்று தற்போதுள்ள வடக்கு–கிழக்கு மாகாணத்தின் எல்லைகளை மீள எல்லை குறிப்பதன் மூலம் அமைக்கப்படும் என யோசனைகளில் குறிப்பிடப்பட்டுள்ள போதும், என்ன அடிப்படையில் எல்லைகள் மீள வரையப்படும் என்பதுபற்றி ஜனாதிபதி தமிழ் கட்சிகளை தனித்தனியே சந்தித்து பேசியபோதும் தெளிவுபடுத்தப்படவில்லை.

அத்துடன் தமிழ் பேசும் முஸ்லீம்களுடைய பாரம்பரிய வாழிடமும் குறித்த பிரதேசத்தில் உள்ளடங்கியுள்ளது. அவர்கள் தமக்கு தனியானதொரு அதிகார அலகை கோரிவருகிறார்கள். அதுபற்றியும் திட்டவட்டமான கருத்தெதுவும் தெரிவிக்கப்படவில்லை.

முக்கியமானதும், சிக்கலானதும், சர்ச்சைக்கிடமானதுமான இந்தப்பிரச்சினைகள் பற்றிய தெளிவான வரையறைகளும் முடிவுகளுமே இனப்பிரச்சினை தீர்வுக்குஅடிப்படை. அத்தகைய முடிவுகளே தமிழ் மக்களின் கவனத்தை ஈர்க்கும். இவை தொடர்பான யோசனைகளே அவர்களின்அபிமானத்தையும் பெறும்.

## அதிகாரம் பகிர்ந்தளிக்கப்படும் பிரதேசத்தினைப் பொறுத்தே அதிகாரப் பகிர்வு தமிழ் மக்களின் அபிலாஷைகளை பூர்த்தி செய்யுமா என்பது தீர்மானமாகும்

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் தீர்வுத் திட்டத்தின் ஒருபகுதியான அதிகாரப்பகிர்வு யோசனைகள் மட்டுமே வெளியிடப்பட்டுள்ளன. அதிகாரப் பகிர்வைப் பெறும் பிரதேசம் தொடர்பாக பின்னர் பேசி இணக்கம் காணப்படும் என ஒத்திப் போடப் பட்டுள்ளது.

இனப்பிரச்சினைத் தீர்வில் அதிகாரப் பகிர்வு, அதிகார அலகு இரண்டும் பிரிக்கப் படமுடியாத அம்சங்கள். இந்த இரண்டு அம்சங்கள் தொடர்பாகவும் எடுக்கப்படும் தீர்க்கமான முடிவில்தான் இனப்பிரச்சினைக் கான தீர்வு தங்கியுள்ளது.

இப்போது இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கு அரசின் யோசனைகளில் தெரிவிக்கப்படும் அதிகாரப் பகிர்வை ஏற்பதாகவும், வடக்கு கிழக்கு இணைப்பையே எதிர்ப்பதாகவும் ஒரு கருத்து தெரிவிக்கப்படுகிறது.

உண்மையில் அத்தகைய ஒரு நிலைப்பாடு இருக்க முடியாது. சராம்சத்தில் இது இனப் பிரச்சினைக்கு சமாதான தீர்வொன்றை காண்பதற்கு எதிரான நிலைப்பாடு.

அதிகாரம் பகிர்ந்தளிக்கப்படும் பிரதேசத்தினைப் பொறுத்தே அதிகாரப் பகிர்வு தமிழ் மக்களின் அபிலாஷைகளை பூர்த்தி செய்யுமா என்பது தீர்மானமாகும்.

## அதிகாரப்பகிர்வு யோசனைகள் அமுல் செய்யப்படுவதை தடுத்து நிறுத்தி அரசியல் தீர்வு ஏற்படுவதற்கு இடையூறாயிருந்து சாதிக்கக்கூடியது இந்நாட்டின் முன்னேற்றத்தை, அபிவிருத்தியை, வளமான எதிர்காலத்தை பாழடிப்பதே

முன்மொழியப்பட்டுள்ள அதிகாரப் பகிர்வு யோசனைகளுக்கு பரந்த வரவேற்புக்கு மத்தியில் எதிர்ப்புக்களும் கிளம்பியுள்ளது. ஆனால், தீர்வு யோசனைகளை முன்வைக்க அரசாங்கம் தயங்கிய அளவிற்கு எதிர்ப்புகள் பரவலாய் இல்லை என்றே கூறலாம்.

அரசியலமைப்பு சீர்திருத்த முன்மொழிவுகளுக்கு அரசியல்வாதிகளிடமிருந்து வரும் எதிர்ப்பினை விடவும் மதத்தலைவர்களிடமிருந்தே வலுவான எதிர்ப்பு தெரிவிக்கப்படுகிறது. அமைதி, சமாதானம், என்ற போதிமாதவனின் போதனைகளை பரப்ப வேண்டியவர்களே யுத்தத்தை வலியுறுத்தி நிற்கிறார்கள்.

அவர்களுக்கும், முன்வைக்கப்பட்ட பிரேரணைகளை முடக்க நினைப்பவர்களுக்கும் இரண்டு விடயங்களை கூறலாம். ஒன்று, தமிழ் மக்களின் நியாயமான பிரச்சினைகள் தீர்க்கப்படாதவரை புலிகளை தோற்கடிக்க முடியாது. நீங்கள் நினைப்பதுபோல் யுத்தத்தின் மூலம் புலிகள் தோற்கடிக்கப்பட்டாலும் இனப்பிரச்சினை முடிவுக்கு வராது.

இரண்டு, பண்டா–செல்வா ஒப்பந்தத்தை எதிர்த்தவர்களே, அதனைவிடவும் அதிகாரங்கள் பரவலாக்கப்பட்ட இந்திய–இலங்கை ஒப்பந்தத்தில் கைச்சாத்திட வேண்டியிருந்தது. இந்திய-இலங்கை ஒப்பந்தத்திற்கு எதிர்ப்பு தெரிவித்தவர்களே இன்று மேலும் அதிகாரங்களை பரவலாக்க அரசியலமைப்பை திருத்த வேண்டியுள்ளது.

ஆகவே, அதிகாரப்பகிர்வு யோசனைகள் அமுல் செய்யப்படுவதை தடுத்து நிறுத்தி அரசியல் தீர்வு ஏற்படுவதற்கு இடையூறாயிருந்து சாதிக்ககூடியது இந்நாட்டின் முன்னேற்றத்தை, அபிவிருத்தியை, வளமான எதிர்காலத்தை பாழடிப்பதே.

இனப்பிரச்சினைக்கு சமாதானமாக பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வுகாண எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை விடுதலைப் புலிகள் உதாசீனம் செய்தார்கள். மோதல் தவிர்ப்பை மீறி பேச்சுவார்த்தைகளை முறித்து மீண்டும் யுத்தத்தை தொடங்கினார்கள்.

இதனால் தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காண முன்வந்த அரசாங்கத்திற்கும், தமிழ் பேசும் மக்களுக்கும் மேலும் மேலும் நெருக்கடிகளையே தோற்றுவித்தார்கள் என்பதை மறுப்பதற்கில்லை.

பல்வேறு தரப்பினரும் இன்று இதனை உணர்ந்துள்ளார்கள். ஆனாலும் இனப்பிரச்சினைக்கு சுமுகமாக நிரந்தரமானதொரு தீர்வைக் காண புலிகளுடனும் பேச வேண்டியது அவசியம் என்பது பல்வேறு தரப்பினரதும் கருத்தாகும்.

ஜனாதிபதியும் அத்தகைய ஒரு கருத்தையே கொண்டிருந்தார். ஆனால் இப்போது அரசியலமைப்பு சீர்திருத்த யோசனைகள் புலிகளுக்கு அனுப்பப்படமாட்டாது; தீர்வு யோசனைகளை ஏற்று புலிகள் பேச முன்வந்தால் நிபந்தனைகள் விதிக்கப்படும் என முட்டுக்கட்டை போட்டுள்ளார்.

"புலிகள் இந்த தீர்வுத் திட்டத்தை ஏற்றுக் கொண்டு பேச வருவார்களா என்பது வேறு விடயம். ஆனால் அவர்களின் வருகைக்கு அரசாங்கம் தடைபோடக் கூடாது. யுத்தம் புரிந்துகொண்டிருந்த புலிகளுடன் எந்த வொரு நிபந்தனையும் விதிக்காமல் பேச்சுவார்த்தைகளை தொடங்கியதோடு புலிகள் கோரிக்கைகளுக்கும் செவிசாய்த்துச் செயற்பட அரசாங்கம் முன்வந்ததற்கு நியாயமான, வலுவான காரணங்கள் இருந்ததென்றால், அந்தக் காரணங்கள் இன்றும் பொருந்தும்.

மேலும், இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண அரசாங்கம் வெளியிட்டுள்ள அதிகாரப்பகிர்வு பற்றிய அரசியலமைப்பு சீர்திருத்த முன்மொழிவுகள் குறித்து தமிழ் மக்களுக்கும் தெளிவுபடுத்த வேண்டிய, பொறுப்பிலிருந்து புலிகளை விடுவிப்பதற்கே அரசாங்கத்தின் இந்த முட்டுக்கட்டை உதவும்.

தமிழர் பிரச்சினைக்கு தீர்வு யோசனைகள் முன்வைக்கப்படப் போவதாக தெரிவிக்கப்பட்ட நாள்முதல் தலைகால் புரியாமல் நிற்கிறது தமிழர் விடுதலைக்கூட்டணி.

கூட்டணித்தலைவர்கள் ஆரம்பத்தில் தீர்வுத் திட்டம் முன்வைக்கப்படக் கூடாது. பேச்சுவார்த்தைகள் தொடரவேண்டும் என்றனர்.

பின்னர் தீர்வுத்திட்டத்தை முன்வைக்கலாம், இடைக்கால நிர்வாக சபையை ஏற்க முடியாது, நாங்கள் பங்குபற்ற மாட்டோம் என்றனர்.

பின்னர் இடைக்கால நிர்வாகசபை அமைக்கப்படுவதாயின் தமிழ் கட்சிகள் பெற்ற வாக்குகளின் அடிப்படையிலேயே இடைக் கால நிர்வாக சபைக்கு உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட வேண்டும் என முன்னேற்பாடாக தமக்கு சாதகமான அறிவிப்பொன்றை வெளியிட்டனர்.

இளைஞர்களின் தியாகங்களை மதிப்பதாக மக்களிடம் கூறிவந்த கூட்டணியின் இலட்சணம் இதுதான்.

இப்போது மீண்டும் இடைக்கால நிர்வாகத்தில் பங்கேற்க மாட்டோம்; அதிகாரப் பகிர்வு யோசனைகளை வரவேற்கிறோம் என முடித்திருக்கிறார்கள்.

தந்தை செல்வா தமிழ் மக்களை கடவுள் தான் காப்பாற்ற வேண்டும் என்று குறிப்பிட்டது இதனால்தானோ என்னவோ?

## விடுதலைப்புலிகள், தாமே தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் என்று கூறிவருவதை கண்டனம் செய்யும் தமிழ் கட்சிகளின் செயற்பாடுகள், அதற்கு மாற்றீடான ஒரு முன்னுதாரணமாய் இல்லை

இன்று தமிழர் தரப்பின் பேரம்பேசும் வலு சிதைந்து போயுள்ளது. பேரினவாதக் குழுக்கள் தமிழர் தரப்பு அழுத்தங்களை மிஞ்சி நிற்கின்றன. தமிழ் தலைமைகள் கூட்டாக யோசனைகளை முன்வைப்பதற்கும் அடிப்படைப் பிரச்சினைகளுக்காகவேனும் ஒருமித்து குரல் கொடுப்பதற்கு முன்வர வேண்டும்.

புலிகள் தமது தலைமையை ஏற்றுக்கொள்ள தவறுபவர்களை துரோகிகள் என பட்டியலிடுகிறார்கள். புலிகளின் ஜனநாயக மறுப்பிற்கு பலியான–ஜனநாயக வழிக்கு வந்திருப்பதாக கூறும் இதர தமிழர் தலைமைகளும் தமக்கிடையே இணக்கம் காணமுடியாமலிருப்பது துரதிர்ஷ்டமே. பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் தமிழ் கட்சிகளும் கூட, கூட்டாக தமிழர் தரப்பு கோரிக்கைகளை வலியுறுத்த முடியாத நிலையில் உள்ளன. தமக்கு தனித்துவம் இருப்பதாய் கூறி இதற்கும் தடையாய் நிற்பவர்கள் கூட்டணியினரே.

விடுதலைப்போராட்டத்தில் உயிர்த் தியாகம் செய்த மாற்று இயக்கப் போராளிகளை கௌரவித்து வரும் இதர தமிழ் கட்சிகளும் கூட அந்த மாற்றுக் கட்சிகள் சமகால அரசியலில் பிரசன்னமாவதை விரும்பாத நிலையே காணப்படுகிறது. விடுதலைப்புலிகள், தாமே தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகள் என்று கூறிவருவதை கண்டனம் செய்யும் தமிழ் கட்சிகளின் செயற்பாடுகள், அதற்கு மாற்றீடான ஒரு முன்னுதாரணமாய் இல்லை.

இன்று பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் தமிழ் கட்சிகள் மட்டுமே தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்ற எண்ணமும் நிலவுகிறது. இத்தகைய போக்குகளும் அதனடிப்படையில் அமைந்த செயற்பாடுகளும் இந்த தருணத்தில் தமிழர் தரப்பின் கோரிக்கைகளை மேலும் பலவீனப்படுத்தவே வழிவகுக்கும் என்பதை தமிழ் கட்சிகள் கவனத்தில் கொண்டு செயற்பட வேண்டியது அவசியம்.

முன்மொழியப்பட்டுள்ள அரசியலமைப்பு சீர்திருத்த யோசனைகள் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பெறுவதோடு சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றையும் சந்திக்க வேண்டிய நிலையில் உள்ளது.

இந்நிலையில் தமிழர் தலைமைகளின் முன்னுள்ள கடமை, தமிழர் தரப்பு கோரிக்கைகளை பேரினவாத நெருக்குதல்களுக்கு உள்ளாகியிருக்கும் அரசாங்கத்திற்கு ஒருமுகமாய் வலியுறுத்துவதுதான்.

அரசாங்கத்திடம் தமிழர் தரப்பு கோரிக்கைகளை வலியுறுத்துகின்ற, அதேவேளை, அரசாங்கத்தில் அங்கம் வகிக்கின்ற, அங்கம் வகிக்காத சிங்கள அரசியல் கட்சிகளிடமும் தமிழ் கட்சிகள் கூட்டாக சந்தித்துப் பேசி இனப்பிரச்சினை தீர்விற்கு அவர்களது ஆதரவை கோரவேண்டும். அத்தகைய ஆதரவு இந்த யோசனைகளுக்கு உயிர்கொடுக்கும்.



## போகிற போக்கில்...

தமிழ் இயக்கங்கள் ஐக்கியப்பட்டுச் சாதித்திருக்கக் கூடிய விடுதலையை எப்போதோ வென்றிருக்கக் கூடிய தமிழ் மக்களது உரிமைகளை, சிதறடித்து, இன்றைய அழிவுகள் அவலங்களாக இழுத்தடித்துக் கொண்டிருக்கக் காரணம் புலிகள்தான் என்பதை நேர்மையாகச் சிந்திப்பவர்கள் ஏற்றுக்கொள்வர். தமிழ் மக்களின் போராட்டத்தைத் தம்கையில் எடுத்துச் சீரழித்துவிட்டவர்கள் அவர்கள் என்பது ஒருபுறமிருக்க, இன்றைய நிலையில் புலிகள் தவிர்ந்த மற்றைய அமைப்பினரும் ஒன்றுபட்டுச் செயற்பட முடியாமலிருக்கிறார்கள் என்பது தமிழர்களின் துரதிர்ஷ்டமல்லாமல் வெறென்ன?

புலிகள் தவிர்ந்த ஏனைய தமிழ்க்கட்சிகள் தமிழ் மக்கள் நலன்குறித்த அடிப்படையான விடயங்களில் ஒரே கருத்தைக் கொண்டிருந்தாலும், அவற்றை ஒரே குரலில் வெளிப்படுத்த முடியாமல், அவரவர் முதிர்ச்சியற்ற குறுகல் மனப்போக்குகளால் சந்தர்ப்பங்களைக் கோட்டைவிட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பது வேதனைக்குரிய உண்மை. பல உதாரணங்களைச் சொல்லலாம்.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். துணிச்சலோடு மாகாணசபையை எடுத்து நடத்தியபோது – அதைத் திரைமறைவில் ஆதரித்துக் கொண்டவர்களும், இந்திய இலங்கை ஒப்பந்தமே நாங்கள் கொண்டுவந்ததுதான் என்று உரிமை கொண்டாட முற்பட்டவர்களும் அந்தச் சவாலை ஏற்றுக்கொள்ள வேண்டிய நேரத்தில் ஒளிந்து நின்று கொண்டார்கள். இப்போது அரசினால் முன்வைக்கப்பட்டிருக்கும் தீர்வு யோசனையை தமிழ் மக்களின் நலன்களினடிப்படையிலான சில மாற்றங்களோடு உறுதிப்படுத்த, ஒரேகுரலில் சில கோரிக்கைகளை வலியுறுத்த வேண்டுமெனக் கேட்டக்கொண்டபோதும் கூட்டணி, ஈ.பி.டி.பி போன்ற கட்சிகள் நிராகரித்து விட்டன. இதில் துரதிர்ஷ்டம் என்னவென்றால் இவர்களுக்கெல்லாம் கோரிக்கைகளில் கருத்து வேறுபாடு இல்லை. சொந்த லாபங்களில்தான் ஈடுபாடு இருக்கிறது என்பதுதான்.

இதைவிட வேடிக்கை, இடைக்கால நிர்வாக சபையைக் கேட்டு ஜனாதிபதியிடம் பேசும்போது, பாராளுமன்றத்துக்கு கிடைத்த வாக்குகளின் அடிப்படையில் தமக்கு அதிக ஆசனங்கள் வேண்டுமென கூட்டணியும், கிடைத்த எம்.பி.க்கள் எண்ணிக்கை அடிப்படையில் தமக்கே அதிக ஆசனங்கள் என ஈபிடிபியும் போட்டி போட்டுக் கொண்டார்கள். அம்மையாரோ இது வெறும் ஆலோசனைச் சபைதான் என்று கூற இருதரப்பினரும் கொள்கை ரீதியாக எதிர்ப்பறிக்கை விட்டிருக்கிறார்கள். தனித்தனியாக மீசையில் மண்படாமல் விழுந்தெழும்பிய புளுகு இவர்களுக்கு. சங்கடமில்லாமல் சமாளித்துவிட்ட திருப்தி அரசுக்கு; சண்டையையே பார்த்துக் கொண்டிருக்க வேண்டிய விதி தமிழ் மக்களுக்கு.

படிப்பகம்

www.padippakam.com



# தீர்வை முழுமையாக்குமாறு அரசையும் தீர்வுத் திட்டத்திற் பங்குபற்றி போருக்கு முடிவுகட்டுமாறு புலிகளையும் நெருக்குதல் வேண்டும்

சாணக்கியன்

சிறிலங்கா அரசாங்கம் முன்னேற்றப் பாய்ச்சல் என்ற பெயரில் யாழ்ப்பாணத்தில் ஓர் பாரிய இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டது. யாழ்ப்பாணத்தின் பெரும் பகுதியை இராணுவம் கைப்பற்றுவதன்மூலம் இராணுவ ரீதியாக ஓர் உயர்நிலையை அடைவதே இதன் நோக்கமாக இருந்தது.

மூன்று நாட்கள் பெரிய இழப்புக்கள் இன்றி முன்னேறிய இராணுவம் நான்காம் நாள் எல்.ரி.ரி.ஈ.யின் பாரிய எதிர்ப்பை சமாளிக்க வேண்டியிருந்தது. ஓர் யுத்த விமானம் சுட்டுவீழ்த்தப்பட்டதும் துருப்புக்களையும், உணவுப்பொருட்களையும் ஏற்றி இறக்கும் கடற்படையினருக்குச் சொந்தமான ஓர் தாய்க்கப்பல் மூழ்கடிக்கப்பட்டதும் 78 சதுர கிலோமீற்றரையும் பாதுகாக்க முடியாமையினாலும் இராணுவத்தின் முன்னேற்றப் பாய்ச்சல் பின்னேற்றப்பாய்ச்சலாக மாறியது.

ஆனால் இந்த முன்னேற்றப் பாய்ச்சலில் 300பேர் வரையிலான அப்பாவிமக்கள் கொல்லப்பட்டனர். ஆயிரத்திற்கு மேற்பட்டோர் காயமடைந்தனர்.

ஆரம்பத்தில் ஓர் பாரிய இராணுவ நடவடிக்கையின் வெற்றியின் பின்னரே தீர்வை வைக்க முடியும் என கூறிய ஜனாதிபதியும், அமைச்சர்களும் முன்னேற்றப் பாய்ச்சல் தோல்வியடைந்ததும், அப்பாவி மக்கள் நூற்றுக்கணக்கில் கொலை செய்யப்பட்டதும்.... தமிழ் மக்களை வென்றெடுக்கும் முகமாக தீர்வுத் திட்டமொன்றினை முன்வைக்க முயற்சிகள் செய்தனர்.

மேலும், தமிழ் கட்சிகளும் சமாதானத்தை விரும்பிய மக்களும் சர்வதேச சமூகமும் தீர்வுத் திட்டம் ஒன்றினை வைக்க வேண்டுமென்பதை வலியுறுத்தி வந்தனர். இவை எல்லாவற்றின் காரணமாக தீர்வின் ஒருபகுதியான அதிகாரப் பகிர்வு என்ற அம்சம் வெளியிடப்பட்டது. ஆனால் அலகு என்ற விடயம் தொடர்பாக இதுவரை எந்தக்கருத்துக்களுமே தெரிவிக்கப்படவில்லை.

முழுமையாக இல்லாவிடினும் ஓரளவிற்கு அங்கீகரிக்கக் கூடிய அதிகாரப் பகிர்வினைக் வெளியிட்டு பத்திரிகைகளிலும், வானொலியிலும், தொலைக்காட்சியிலும் அதற்கு அதிமுக்கியத்துவமும் கொடுத்து உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் தமிழ் மக்களுக்கு முழுமையான உரிமைகளை கொடுத்தாயிற்று என்ற ஓர் மாயை உருவாக்க அரசாங்கம் முயற்சி செய்வதாகத் தோன்றுகின்றது.

பிரச்சினையை முழுமையாக தீர்ப்பதற்கு இரண்டு விடயங்கள் அடிப்படையானவையாக இருந்தது.

ஒன்று, வட-கிழக்கு இணைப்பு (நிர்வாக அலகு). இரண்டாவது, முழுமையான அதிகாரப்பகிர்வு. இதில் வட-கிழக்கு இணைப்பு என்ற விடயம் அல்லது ஒருமித்த மாகாணம் என்ற விடயம் வெளியிடப்படவில்லை.

இவ்வகையில் அரசாங்கம் முழுமையான தீர்வை எட்டிவிட்டதாகக் காட்டினாலும் உண்மையில் அவ்வாறு இல்லை என்பதே யதார்த்தமாகும்.

தீர்வின் இன்னோர் பகுதியான அலகு பற்றிய விடயம் வெளியிடப்படுமா? அதாவது இணைந்த வட-கிழக்கு மாகாணம் என்ற தமிழ் மக்களின் கோரிக்கை நிறைவேற்றப்படுமா? என்ற கேள்விகளைப் பொறுத்தவரை இரண்டு வகையான கருத்துக்கள் நிலவுகின்றன.

ஒன்று, வட-கிழக்கு இணைக்கப்படமாட்டாது. இரண்டும் தனித்தனியானதாக இருக்கும். கிழக்கில் அம்பாறை மாவட்டத்தின் ஓர்பகுதியை மையமாகக் கொண்டு முஸ்லீம் மக்களுக்கென ஓர் தனியான பிரதேசம் உருவாக்கப்படும். மொத்தத்தில் வட-கிழக்கில் 3 மாகாணங்கள் அல்லது நிர்வாக அலகுகள் உருவாக்கப்படும் என்பது.

இத்தீர்வுத் திட்டத்தினை சிங்களத் தேசிய(இன)வாதிகள் இனவெறியைத் தூண்டுவதற்குப் பயன்படுத்த இடமளிக்கக்கூடாது. எனவே வடக்கு தனியாகவும்,எல்லை மாற்றம் செய்யப்பட்ட மட்டக்களப்பு திருமலை மாவட்டங்கள் ஓர் சபையாகவும் உருவாக்குவதன் மூலம் கடந்த 50 ஆண்டுகளாக ஆட்சிக்கு வந்த அரசுகளால் தொடரப்பட்டதாகிய சிங்களக் குடியேற்றங்களைப் பாதுகாத்தல் என்பதைத் தான் சரியாக செய்திருப்பதாகக் காட்டி அவர்களின் இனவெறிப் பிரச்சாரங்கட்கு ஆப்பு வைப்பது:



முஸ்லீம்களைப் பொறுத்தவரை அம்பாறை மாவட்டத்தின் ஓர் பகுதியை உள்ளடக்கி ஓர் முஸ்லீம் அல்லது தென்கிழக்கு மாகாண சபையை உருவாக்குவதன் மூலம் முஸ்லீம் மக்களின் ஆதரவையும் பெற்றுக்கொள்ளல்.

அதிகாரப்பகிர்வில் ஏறத்தாழ இந்திய மாநிலங்களையொத்த அதிகாரங்களை வழங்குவதன் மூலம், தமிழ் மக்களின் ஆதரவைப் பெற்றுக்கொள்வது.

இவ்வகையில் சகல தொடர்புசாதனங்களும் நல்லதோர் தீர்வு வைக்கப்பட்டுவிட்டதாக தொடர்ச்சியான பாராட்டுக்களைப் பல்வேறு தரப்புக்கள் தெரிவிப்பதையும் பிரச்சாரப்படுத்தி வருகின்றன. இந்தப் பிரச்சாரத்திற்குள் நிர்வாக அலகு என்பதன் முக்கியத்துவம் மறைந்துவிடும் அல்லது ஏற்றுக் கொள்ள வைக்கலாம் என அரசு கருதுவதாகத் தெரிகிறது.

தீர்வுத் திட்டத்தில் அரசின் அணுகுமுறை பற்றிய இன்னோர் கருத்து என்னவெனில், 'ஜனாதிபதியவர்கள் தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் உளப்பூர்வமான உறுதிகொண்டுள்ளார். கடந்த காலங்களில் பல தீர்வுத் திட்டங்களும் இனவாதிகளின் நடவடிக்கைகளாலேயே குழப்பப்பட்டன. இனவாதிகளை இலகுவாக எடுத்துக்கொண்டு முழுமையான திட்டத்தை வெளியிடுவதென்பது இனவெறிகளின் விஷமப்பிரச்சாரங்கட்கு வாய்ப்பாகிவிடும். எனவே, ஒவ்வோர் பகுதியாக வெளியிட்டு அதற்கு தேசிய, சர்வதேச ஆதரவைப் பெற்று உறுதியாகத் தொடர்வதன் மூலம் திட்டத்தை நடைமுறைச் சாத்தியமாக்கலாம் என்பதே ஜனாதிபதியின கணிப்பு. எனவே நிர்வாக அலகு பற்றிய விடயத்தில் வடக்கு கிழக்கு இணைப்பையும் அதிகாரப் பகிர்வுடன் சேர்த்தே வெளியிட்டால் அது இனவாதிகளால் தவறாக விளக்கப்படும். அரசு தீர்வுத் திட்டம் வைக்குமா? என்ற சந்தேகம் வலுத்துக்கொண்டு வந்தவேளையில் இத்தகைய நல்லதோர் அதிகாரப் பகிர்வை வெளியிட்டனர். அதேபோல் நிர்வாக அலகும் வட-கிழக்கு இணைந்த அலகே என்பதும் விரைவில் அறிவிக்கப்படும் என எதிர்பார்க்கலாம்' என்ற நம்பிக்கையான கருத்தோட்டமும் நிலவுகிறது.

எனினும் கடந்த ஆட்சிக் காலத்தில் மங்களமுனசிங்க தலைமையிலான இனப்பிரச்சினைக்கான தெரிவுக்குழு, வடக்கையும் கிழக்கையும் பிரிப்பதை ஏற்றுக்கொண்டால் அதிகாரங்களை அதிகமாக தர முன்வந்தமையைக்கணக்கிலெடுத்து நோக்கின் இணைப்பு என்பது அரசால் ஏற்றுக் கொள்ளப்படுமா என்ற கேள்வி நியாயமாக எழுகிறது.

அதிகாரப்பகிர்வு, அதனைத்தொடர்ந்து இடைக்கால நிர்வாகம் இவைகள் யாவும் யாழ்ப்பாண குடாநாட்டில் பாரியளவில் யுத்தத்தை நடாத்துவதற்கான முன்தயாரிப்புக்களாகவே தோன்றுகின்றன. எனவே, யுத்த நடவடிக்கையின் ஒருபகுதியாகவே இத் தீர்வுத் திட்டங்கள் அமைகிறதா? என்ற கேள்வியும் எழுகிறது.

புலிகள் தோற்கடிக்கப்படுவதற்கு தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஓர் தீர்வுத் திட்டம் அவசியமானது. ஆனால், அரைகுறைத் தீர்வுத்திட்டத்தை முழுமையானதாகக் காட்டி தமிழ் மக்களைத் திசைதிருப்ப முனையக் கூடாது.

அத்துடன் நீண்டகாலப் போருக்கான அங்கீகாரத்தைப் பெறுவதற்கே தீர்வுத்திட்டம் என்ற நோக்கமும் அரசுக்கிருக்குமாயின், அதுவும் அரசுக்கு தற்காலிக அரசியல் லாபங்களைமட்டுமே கொடுக்கும் என்பதுடன் தமிழ் மக்களின் சந்தேகத்தை முழுயாகப் போக்கி, போருக்கு முற்றுப்புள்ளி வைக்க உதவாது.

முன்னேற்றப்பாய்ச்சலில் சிறிலங்கா அரசாங்கம் தோல்வியடைந்தாலும், வெலிஓயாவில் 400இற்கு மேற்பட்ட புலிகளை கொலை செய்ததன் மூலம் தாம் பாரிய ஓர் வெற்றியடைந்த சந்தோஷத்திலேயே இலங்கை இராணுவம் உள்ளது. இது அவர்கட்கு மனோரீதியான புத்துணர்ச்சியையும் கொடுத்துள்ளது.

புலிகளைப் பொறுத்தவரையில் தேவைக்கதிகமானளவு ஆயுதங்கள் அவர்களிடம் இருந்தும்கூட அவர்களின் படைகளில் ஆட்கள் பற்றாக்குறை அதிகமாகவுள்ளது. இதனால் சிறிலங்கா இராணுவத்தின் பாரிய தாக்குதலை எதிர்கொள்வதில் இவர்களுக்கு பல கஷ்டங்கள் ஏற்படலாம்.

> “புலிகளைப் பலவீனப் படுத்தலாம், அரைகுறைத் தீர்வுத் திட்டத்துடன் முடிக்கலாம் என அரசு நினைப்பதோ அல்லது இத் தீர்வுத்திட்டத்தில் பங்கேற்று அதனை முழுமைப்படுத்தி, அதன்மூலம் தமிழ் மக்களின் பிரச்சினைகட்கு முடிவு காணும் நடவடிக்கைகளிற் பங்களிப்பதற்கு மாறாக, அரசையோ, அரச படைகளையோ ஆத்திரமூட்டி அதன்மூலம் ஏதும் அழிவுகள் ஏற்படுமாயின், அதைவைத்தே போருக்கு நியாயம் கற்பித்து அரசியற் பிழைப்பு நடத்தலாம் என புலிகள் நினைப்பதோ தமிழ் சமுதாயத்திற்கும் இந்தநாட்டிற்கும் தொடர்ந்தும் அழிவையே தரும்.”

யாழ்நகர் மீதான இன்னொரு தாக்குதலுக்கு அரசபடைகள் ஆயத்தமாகுவதாகவே தோன்றுகின்றது. மட்டக்களப்பிலிருந்த பல படை முகாம்கள் மூடுப்பட்டு அங்குள்ள இராணுவத்தினர் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பப்பட்டு வருகின்றனர்.

இந்நிலையில் இராணுவத்தின் அடுத்த கட்ட தாக்குதல்களை சமாளிப்பதற்கு புலிகளுக்கு பலத்த கஷ்டங்கள் தோன்றலாம். முன்னரைப்போன்றே குண்டுவீச்சு விமானங்களையும், கப்பல்களையும் தகர்க்க முடியுமாயின் இன்னும் சிறிதுகாலம் எல்.ரி.ரி.ஈ.யின் தாக்குதல்கள் தொடரலாம். இல்லையேல், கொரில்லா இயக்கமாகவே மீண்டும் மாறி சிறுசிறு தாக்குதல்கள் தொடரலாம்.

மொத்தத்தில், தமிழ் மக்களின் நீண்டகாலப் பிரச்சினைகளைத் தீர்க்கும் வகையில் வடக்கு கிழக்கு இணைந்த மாநிலத்திற்கு முழுமையான தீர்வை முன்வைத்து தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்திசெய்வதன்மூலம், அழிவுக்கும் அனர்த்தங்களுக்கும் உறுதியாக முடிவுகட்டி சமாதானத்தை நிலைநாட்டுவதற்குப் பதில், புலிகளைப் பலவீனப் படுத்தலாம், அரைகுறைத் தீர்வுத்திட்டத்துடன் முடிக்கலாம் என அரசு நினைப்பதோ அல்லது இத் தீர்வுத்திட்டத்தில் பங்கேற்று அதனை முழுமைப்படுத்தி, அதன்மூலம் தமிழ் மக்களின் பிரச்சினைகட்கு முடிவு காணும் நடவடிக்கைகளிற் பங்களிப்பதற்கு மாறாக, அரசையோ, அரசபடைகளையோ ஆத்திரமூட்டி அதன்மூலம் ஏதும் அழிவுகள் ஏற்படுமாயின், அதைவைத்தே போருக்கு நியாயம் கற்பித்து அரசியற் பிழைப்பு நடத்தலாம் என புலிகள் நினைப்பதோ தமிழ் சமுதாயத்திற்கும் இந்தநாட்டிற்கும் தொடர்ந்தும் அழிவையே தரும்.

இவ்வழிவுகட்கு அரசும், புலிகளுமே பொறுப்பாளிகளாவார்கள். முழுமையான தீர்வை நோக்கி அரசையும் தீர்வுத் திட்டத்திற் பங்குபற்றி போருக்கு முடிவுகட்ட புலிகளையும் நெருக்குவது இந்நாட்டு நலனிலும் தமிழ் மக்கள் நலனிலும் அக்கறை கொண்ட அனைவரின் கடமையுமாகும். ●



## போகிற போக்கில்...

கிழக்கில் பெரும்பான்மை இன கட்சிகளில் உள்ள தமிழ் முக்கியஸ்தர்கள் இரண்டு இடங்களில் நியமனம் பெற்றிருப்பார்கள். முதலில் புலிகளிடம் அனுமதியும் பிறகு அந்தக்கட்சிகளில் நியமனமும் கிடைத்திருக்கும். உழைத்த கணக்கு காட்டுவதும் இவ்வாறுதான். இப்போது பொதுஜன முன்னணி தலைவர்களுக்கு விலகச் சொல்லி புலிகளிடமிருந்து கடிதம் வந்தே விட்டது. கனபேரை ஊரில் காணமுடியவில்லை. சிவனுக்கும் சூழல் சரியில்லை. பிள்ளையாருக்கும் போதாத காலம். தேர்தல் மேடைகளில் பேசித் திரிந்த அறிவாளிகளிடம் கதையைக் கொடுத்தால் கவிதையைப் பற்றி கதையை மாற்றுகிறார்கள். பொறுப்பு எடுக்கும் போது புலிகளிடம் எடுக்கும் சத்தியப் பிரமான வசனத்தை ஞாபகப்படுத்தலாம் போலிருக்கிறது: "நாங்கள் சரி என்னும் போதுதான் எல்லாம் சரி".

– சோலையூரான்


படிப்பகம்

www.padippakam.com



# இராணுவம் எதிர் புலிகள்

## யாழ் குடாநாட்டில் முன்னோக்கிப் பாய்ச்சல் நடவடிக்கை!




என். ஆர். சோமு

புலிகளின் பிடியில் இருந்து யாழ் குடா நாட்டை விடுவிப்பதற்காக யூலை 9ம் திகதி முன்னோக்கிப் பாய்தல் என்னும் கோஷத்துடன் புலிகளுக்கு எதிராக ஆரம்பிக்கப்பட்ட பாரிய இராணுவத் தாக்குதல் யூலை 16ம் திகதியுடன் ஒரு முடிவுக்கு வந்திருக்கிறது.

புலிகளுக்கு ஒரு கசப்பான பாடம் படிப்பிக்க வேண்டும் என நினைத்து போருக்கு புறப்பட்ட இராணுவம் ஒரு கசப்பான பாடத்தை புலிகளிடம் இருந்து படித்து திரும்பி இருக்கிறது என்றே சொல்லவேண்டும்.

யாழ் குடாநாட்டின் மேற்குப் பகுதியை ஐந்து நாட்களில் புலிகளிடம் இருந்து மீட்டெடுத்த இராணுவம், இரண்டு நாட்களில் கைப்பற்றிய இடங்களில் இருந்து பின்வாங்கி சென்றதென்பது அரசையும் இராணுவத்தையும் ஒரு அவநம்பிக்கையுடன் பார்க்க வேண்டிய நிலைமையையே அரசியல் அவதானிகளுக்கும் இராணுவ ஆய்வாளர்களுக்கும் ஏற்படுத்தியிருக்கிறது.

### மூடிமறைக்க முடியாத சறுக்கல்

அரசும் இராணுவமும் என்னதான் காரணங்கள் சொன்னாலும் அது ஏற்புடையதாக இருக்கவில்லை. தந்திரோபாயமாக நாங்கள் பின்வாங்கியிருக்கிறோம், புலிகளின் விமான ஏவுகணைத் தாக்குதலைத் தடுப்பதற்கான நிலப்பரப்பை கைபற்றி விரிவுபடுத்தியிருக்கிறோம் என்று பலதரப்பட்ட காரணங்களை இராணுவம் கூறினாலும், இந்த முன்னோக்கி பாய்ச்சலின் பின்னடைவுகளை மூடிமறைக்க முடியாது.

(அதுமட்டுமல்லாது இந்த இராணுவ பாரிய தாக்குதலால் அப்பாவிப் பொதுமக்கள் குழந்தைகள் கொல்லப்பட்டும், காயப்படுத்தப் பட்டும், வீடுகள், உடமைகள் அழிக்கப்பட்டுப் போனதென்பதும் மறுக்கமுடியாத விடயங்கள் ஆகும்).

காங்கேசன்துறை முகாம்களில் இருந்து தாக்குதலை ஆரம்பித்த இராணுவம் யாழ் குடாநாட்டின் மேற்கு நோக்கி நகர்ந்து பின், இரண்டு பிரிவுகளாகப் பிரிந்து ஒரு படைப் பிரிவு பொன்னாலை என்ற இடத்தையும் மற்றப் படைப்பிரிவு சண்டிலிப்பாய் என்ற சிறு பட்டினத்தையும் கைப்பற்றியது. தெல்லிப் பளையில் இருந்து புறப்பட்ட இன்னொரு படைப்பிரிவு அளவெட்டியை நோக்கி முன்னேறிக் கொண்டிருந்தது.

### பொன்னாலையின் முக்கியத்துவம்

முன்னோக்கிப் பாய்ச்சல் நடவடிக்கையின் முதல்நாளே இராணுவத்தால் இலகுவாக கைப்பற்றப்பட்ட பொன்னாலை எந்த விதத்தில் முக்கியத்துவம் பெறுகின்றது என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டியிருக்கிறது.

இதன் நிலப்பரப்பு விவசாயத்திற்கு ஏற்காத உவர்நிலமாகவும், ஆழம் குறைந்த கடல்நீர் ஏரியாகவும் சூழப்பட்டு இருப்பதால் இதன் முக்கியத்துவம் சாதாரண காலங்களில் மறைந்தே காணப்பட்டது. இதனால் புலிகளோ இராணுவமோ மக்களோ இப்பகுதியை முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதவில்லை.

காலப்போக்கில் யாழ்குடாநாட்டில் புலிகளின் ஆளுமை அதிகரித்தபோது பொன்னாலை இராணுவ முக்கியத்துவம் வாய்ந்த பகுதியாக இருதரப்பிலும் கருதப்பட்டாலும் அவ்விடத்தில் புலிகளோ இராணுவமோ நிரந்தரமான முகாம் எதையும் அமைக்கவில்லை. ஏனென்றால் இதன் புவி அமைப்பு முகாம்கள் அமைப்பதற்கு ஏதுவாக இருக்கவில்லை.

இருந்தாலும், காரைநகர் கடற்படை முகாமுக்கு வேண்டிய உணவு தண்ணீர் யாழ் குடாநாட்டில் இருந்து எடுத்துச் செல்ல வேண்டியிருந்ததால் பொன்னாலைப் பாலம் ஒரே வழியாக கடற்படையினருக்கு இருந்து வந்தது. இந்தப்பாதை அடைபட்டுப் போனடத்தில் இது முக்கியத்துவம் பெறுகிறது. குறிப்பாக புலிகளைவிட இராணுவத்தினருக்கே அனுகூலமாக இருக்கிறது.

ஏனென்றால் பலாலி காங்கேசன்துறை இராணுவ முகாம்களில் இருந்து ஒரு தரை வழிப் பாதையை காரைநகர் கடற்படை முகாம் வரை ஏற்படுத்த வேண்டிய கட்டாய தேவை இருப்பதால் பெரும்படை அணியுடன் பொன்னாலைப் பிரதேசத்தை இராணுவம் கைப்பற்றியதென்பது ஒரு குறிப்பிடத்தக்க வெற்றியாகும். அதேநேரத்தில் காரைநகர் கடற்படை முகாமிலிருந்து வந்த கடற்படை அணியினர் பொன்னாலை இராணுவத்தினருடன் இணைந்தது மேலும் இராணுவ பலத்தை அதிகரிக்கவே செய்தது.

### சட்டிக்குள்ளிருந்து அடுப்பிற்குள்...

பொன்னாலையையும் காரைநகரையும் இணைக்கும் பாலமும் இராணுவத்தினரிடம் வீழ்ச்சியடைந்த பின் அடுத்து என்ன செய்ய வேண்டும் என்று சரியான முறையில் இராணுவ அதிகாரிகள் திட்டமிடவில்லை என்றே தோன்றுகின்றது. ஏனென்றால் 85ம் ஆண்டுக்குப் பிறகு பலாலி காங்கேசன்துறை முகாம்களில் இருந்து காரைநகர் வரை இராணுவ முக்கியத்துவம் வாய்ந்த தரை வழிப் பாதையை அமைக்கக்கூடிய சந்தர்ப்பம் இருந்தும் அதை இராணுவம் தவறவிட்டு

அர்த்தம் இருந்திருக்கும். ஒரு 20 கிலோ மீற்றர் பாதையை அமைத்திருக்க முடியும்.

மக்கள் வாழும் பிரதேசங்களில் ஷெல் தாக்குதலாலும், விமானக் குண்டு வீச்சாலும் அப்பாவி மக்களைக் கொன்றுகுவித்து கெட்டபெயர் வாங்குவதைவிட, மக்கள் நட மாட்டமில்லாத பகுதியில் ஒருவழிப் பாதையை அமைத்து இராணுவ ரீதியில் வெற்றியும் சர்வதேச ரீதியில் நல்ல பெயரையும் சம்பாதித்திருக்கலாம்.

அப்படி இராணுவம் செய்திருந்தால் இன்று பலாலி, காங்கேசன்துறை, கீரிமலை சேந்தான்குளம், மாதகல், பொன்னாலை வலந்தலைச்சந்தி (காரைநகர்) களபூமி காரைநகர் கடற்படை முகாம், காரைநகர் ஜெற்றி, ஊர்காவற்றுறை, மண்டைதீவு வரை ஏறக்குறைய 45 கிலோமீற்றர் தூர வழிப் பாதையை அமைத்திருக்க முடியும்.

மேற்கூறிய இடங்களுக்கூடாக ஒரு வழிப்பாதை அமைக்க வேண்டுமானால் பொன்னாலை பலம்பொருந்திய இராணுவக் கட்டுப்பாட்டு பிரதேசமாக இருக்க வேண்டும். அதுமட்டுமல்லாது இந்தப் பாதையை இராணுவம் முதலில் அமைக்க முடியவில்லையானால் யாழ் குடாநாட்டை புலிகளிடம் இருந்து மீட்கும் திட்டத்தை கைவிட வேண்டும்.

ஏனென்றால், ஷெல் அடியாலும், விமானக் குண்டு வீச்சாலும் கொல்லப்படப் போகிறவர்கள் அப்பாவிப் பொதுமக்களே. புலிகளிடமிருந்து மக்களைக் காப்பாற்றப் போய் அந்த மக்களையே கொல்லும் துர்ப்பாக்கிய நிலைமைக்கு அரசாங்கம் போகக் கூடாது.

### புலிகளின் போர்த் தந்திரம்

இராணுவத்தினரின் முன்னோக்கிப் பாய்ச்சலும், அதிக எதிர்ப்புக் காட்டாது புலிகளின் பின்நோக்கிப் பாய்ச்சலும் இராணுவ அதிகாரிகளுக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தாலும் முன்னணியில் சென்றுகொண்டிருந்த இராணுவ வீரர்களுக்கு அச்சத்தைக்





அரசு இராணுவ உயர்பீடத்தால் பல நாட்களாக நன்கு திட்டமிடப்பட்டும், அரச வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகைகளால் விளம்பரப்படுத்தப்பட்டும், சர்வதேச சமூகங்களுக்கு நியாயப்படுத்தப்பட்டும் புலிகளுக்கு எதிரான இத் தாக்குதல் இராணுவத்தால் ஆரம்பிக்கப்பட்டது.

யூலை மாதம் 9ம் திகதி காலை 6மணிக்கு விமானப்படை, கடற்படை உதவியுடன் பலாலி

தென்பது புலிகளைவிட கடற்படை-இராணுவத்தினருக்கே பெரிய இழப்பாகும். 85ம் ஆண்டில் இருந்து இன்றுவரை காரைநகர் கடற்படையினர் தமக்கு உணவு, ஆயுதம் முதலியவற்றை கடல்மார்க்கமாகவே பெற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

யாழ் குடாநாட்டையும் காரைநகரையும் இணைக்கும் ஒரு பாலமாக பொன்னாலை இருப்பதால் இன்று இராணுவக் கண்ணோட்

விட்டது என்றே சொல்லவேண்டும்.

முன்னேறிப் பாய்ச்சலின் மூலம் கிடைத்த இந்த வெற்றியை இராணுவ அதிகாரிகள் பயன்படுத்திக் கொள்ளாதது வியப்புக்குரிய விடயமாகும். மேலும் மேலும் முன்னேறிப் பாய்ந்து யாழ்நகரை பிடிக்கப்போய் அராலியுடன் பின்வாங்கி வந்ததை விட, பிடித்த இடத்தைப் (பொன்னாலையை) பலப்படுத்தியிருந்தால் இந்த முன்னேறிப் பாய்ச்சலில் ஒரு

கொடுத்திருக்கும் என்பதே உண்மை.

பலாலி-காங்கேசன்துறையில் இருந்து மேற்கு நோக்கிப் புறப்பட்ட இராணுவம் பொன்னாலையில் நிலைகொண்டு பலப்படுத் தாது அராலி தெற்குவரை 25 கி.மீற்ற தரைவழிப் பாதையையும் அதையொட்டிய பிரதேசங்களையும் தனது கட்டுப்பாட்டிற்குக் கொண்டுவந்தது.

படிப்பகம்

www.padippakam.com





அதேநேரத்தில் தெல்லிப் ளையிலிருந்து தென்மேற் ாக அளவெட்டி நோக்கி றப்பட்ட இராணுவம் அள வட்டியை கைப்பற்றி சண்டி ிப்பாயில் நிலைகொண்டுள்ள இராணுவத் டன் இணைந்துகொண்டது.

மிகவும் குறுகிய நாளில் ஆச்சரியப்படத் க்க விதத்தில் யாழ் குடாநாட்டின் மேற்குப் ததிகளை இராணுவம் தமது பலமற்ற கட்டுப் ாட்டுக்குள் கொண்டுவந்தது அரச, இரா றுவ அதிகாரிகள் மத்தியில் உற்சாகத்தை ம் வியப்பையும் ஏற்படுத்தியது.

ஆனால் புலிகளின் போர்முறைத் தந்திரம் வறாக இருந்தது. கடந்த காலங்களில் எதி க்கு சந்தர்ப்பம் கொடுக்காமல் அதிரடித் ாக்குதல் தொடுத்திருக்கும் புலிகள் இந்த த்தத்தில் முதலில் பின்வாங்கிச்செல்லும் ஒரு போர்முறையை கடைப்பிடித்தனர்.

அதாவது, இராணுவ அணிகளை தங்கள் ட்டுப்பாட்டு பிரதேசத்துக்குள் அதிக எதிர்ப் ின்றி வரவிட்டு, ஒரு மரண வலைக்குள் அவர்களை அறியாமலேயே சிக்க வைத்து, அவர்கள் நிலைகொண்டு தங்களைப் பலப் டுத்துவதற்கு முன் பலமுனைகளில் ஊட றுத்துத் தாக்கி அழிப்பதே புலிகளின் போர் முறையாக இருந்தது.

## புக்காராவும் எடிதாராவும்

மேலே குறிப்பிட்டதைப்போல 14ம் திகதி அதிகாலை இரவு சண்டிலிப்பாய், அளவெட்டியில் நிலைகொண்டிருந்த படைகள் மீது புலிகளால் தொடுக்கப்பட்ட தாக்குதலானது இராணுவத் திற்கு மிகப் பாரிய இழப்பை ஏற்படுத்தியது. உதவிக்கு வந்த புக்காரா குண்டுவீச்சு விமா னம் புலிகளின் விமான எதிர்ப்பு ஏவுகணைப் படைப்பிரிவால் சுட்டுவீழ்த்தப்பட்டது. இந்த விமானத்தை ஓட்டிவந்த விமானி டி.எஸ். பெரேரா (வயது 24) ஸ்தலத்திலேயே கொல் லப்பட்டார்.

ஆஜன்டினா தயாரிப்பான புக்காரா குண்டுவீச்சு விமானம் புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டதென்பதானது அவர்களிடம் விமான எதிர்ப்பு ஏவுகணை இருப்பதையே உறுதிப்படுத்துகிறது. இந்த போர் விமானத் தின் இழப்பு அரச இராணுவ அதிகாரி களுக்கு அதிர்ச்சியையும் கவலையையும் அளித்திருக்கும் என்பது உண்மை.

இந்த பாரிய இழப்புக்குப்பின் 16ம் திகதி அதிகாலை கடற்படைக்குச் சொந்தமான ராடர் சாதனம் பொருத்தப்பட்ட எடிதாரா கப்பல் புலிகளின் தற்கொலைப் படையால் காங்கேசன்துறை துறைமுகத்தில் வைத்து மூழ்கடிக்கப்பட்டது.

இத்தாக்குதல் நடைபெறுவதற்கு சில மணிநேரங்கள் முன்புதான் 70தொன் வெடி மருந்துகளும், மோட்டார் ஷெல்களும் கப்ப லில் இருந்து இறக்கப்பட்டது. மாறாக, இறக் குவது தாமதமாகி கப்பலில் இருந்த வெடி மருந்துகளுடன் சேர்த்து வெடித்திருந்தால் காங்கேசன்துறை துறைமுகம் முற்றுமுழு தாக அழிக்கப்பட்டிருக்கும்.

துறைமுக அதிகாரிகளின் துரித நடவடிக் கையால் (வெடிமருந்தை கப்பலில் இருந்து இறக்கியது) ஏற்படவிருந்த பாரிய அழிவு தடுக்கப்பட்டிருக்கிறது. தலைக்கு வந்த ஆபத்து தலைப்பாகையுடன் போனது.

சண்டிலிப்பாய் அளவெட்டி தாக்குதலால் ஏற்பட்ட உயிர் இழப்புகளும், புக்காரா குண்டு வீச்சு விமானம் சுட்டுவீழ்த்தப்பட்டதும், ராடர் சாதனம் பொருத்தப்பட்ட தாய்க் கப்பலான எடிதாரா மூழ்கடிக்கப்பட்டதும் அரச இரா ணுவ அதிகாரிகள் மட்டத்தில் மாற்றங்களை ஏற்படுத்தியது.

இதன் விளைவு இராணுவம், தாங்கள் கைப்பற்றிய இடங்களில் இருந்து விரைவாக பின்வாங்கி தங்கள் பழைய நிலைகளுக்கே திரும்பியது. இது தற்காலிக பின்னடைவே என்று அரசும் இராணுவமும் கூறினாலும் தங்கள் பலம் பலவீனங்களை முழுமையாக அறிந்திருப்பார்கள் என்றே நம்பப்படுகிறது.

## மக்களே பலிக்கடா

இந்த முன்னோக்கிப் பாய்ச்சலால் இரு தரப்பிலும் ஏற்பட்ட உயிர்ச் சேதங்களைவிட மக்கள் தரப்பில் ஏற்பட்ட அழிவுகளும் அவலங் களும் உயிர்ச் சேதங்களும் அதிகம் என்பது தான் கொடுமை.


மீண்டும் இதேபோன்று ஒரு முன்னோக் கிப் பாய்ச்சலை தொடுப்பதற்கு அரசும் இரா ணுவமும் முனைப்புடன் இருப்பதாக அறியப் படுகிறது. அதற்காக ஆள்திரட்டலும் வெளி நாடுகளிலிருந்து நவீன ஆயுதக் கொள்வன வும் முனைப்புடன் நடந்துகொண்டிருக்கிறது.

புலிகளும் தங்கள் பங்குக்கு தமது கட்டுப் பாட்டு பிரதேசத்தில் வாழும் மக்களையும், வியர்பாரிகளையும், அரச ஊழியர்களையும் கட்டாயப்படுத்திப் பணவசூல் வேட்டையில் இறங்கியிருக்கிறார்கள்.

யாழ் குடாநாட்டை புலிகளிடம் இருந்து மீட்பதில் இராணுவமும், அதை தக்கவைத்துக் கொள்வதில் புலிகளும் இதை ஒரு கௌரவப் பிரச்சினையாக கருதுவதால், இதற்குள் சிக்கி பாதிக்கப்படப் போவது அப்பாவிப் பொது மக்களே.

சாத்தியமானதை திட்டமிட்டு சரியாக செய்து முடிப்பதும், முடியாததை பொறுத்தி ருந்து சாதிப்பதும், புலிகளைவிட அரசே இதை கவனத்திற்கு எடுத்துக்கொள்ள வேண்டும். ஏனென்றால் மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசும் அதனை வழிநடாத்தும் ஜனாதிபதி அவர்களும் இராணுவத்தை ஏவி விட்டு புலிகளை அழிக்கிறோம் என்ற பெய ரால் தனது சொந்த மக்களை அழிக்கக் கூடாது என்பதே பெரும்பாலோரின் எதிர் பார்ப்பாகும்.

# குறுக்கெழுத்துப் போட்டி-15



### இடமிருந்து வலம்

1. இனப்பிரச்சினைத் தீர்வில் செய்யப்பட வேண்டியது.
7. சுவை.
8. பெரும்பாலானோர் அவதிப்பட அரசும் புலிகளும் செய்துகொண்டிருப்பது. (தலைகீழ்)
10. மதம்.
12. மிகச் சிறிய இலை கொண்ட மரம். (குழம்பி)
14. கல்யாணக் கொட்டகை.
16. பலவற்றுள் கொஞ்சம்.
17. சிறுவரின் விளையாட்டுப் பொருள் ஒன்று.
18. கலைகளோடு சம்பந்தமான அழகைக் குறிப்பது.
19. பங்கிடு.
21. விளக்கில் இருப்பது.
23. பெண்.
24. சடங்கிலே மிதிக்கவும், சமையலில் அரைக்கவும் உள்ளது. (தலைகீழ்)
27. முட்டாள்தனமாயெல்லாம் நடந்துகொள்வதற்காக மனிதனுக்கு மட்டுமே கிடைத்த அறிவு.
30. 'தடா'வில் கைதாகி சிறையிலிருக்கும் பிரபல ஹிந்தி நடிகரின் பின்பாதி.
32. சுமை. (தலைகீழ்)
33. ஒரு செயலுக்குக் காரணமாயிருப்பவன்;
35. இராசகோபாலன் என்ற இயற்பெயர் கொண்ட கவிஞர், பாரதிதாசன் மேலிருந்த அபிமானத்தினால் வைத்துக்கொண்ட புனைபெயர். சுருக்கமாக 'சுரதா'வானார்.

### மேலிருந்து கீழ்

2. காதலின் சோக முடிவுகளில் ஒன்று தற்கொலை, மற்றது இது.
3. தந்தையைச் சுவருக்குள் வைத்துக் கட்டியவன், சிகிரியாவைத் தலைநகராக்கியவன்.
4. பிரம்மாவின் தொழில். கடைசி எழுத்தில்லை.
5. கேலி.
6. பைத்தியம். (தலைகீழ்)
9. தேவைக்கு அதிகமாக அசடுவழியும் இளைஞன்.
10. ஏற்றத்தாழ்வு பார்க்காமல் ஒன்றாக அமர்ந்து உணவு உண்ணுதல்.
11. மேல் உலகம். (குழம்பி)
13. வாயில் வைத்து ஊதலாம். (தலைகீழ்)
15. போட்டி. (குழம்பி)
18. கஞ்சன்.
20. 'ஆ' நெடில் என்றால் 'அ' ——. (குழம்பி)
22. குதிரை. (தலைகீழ்)
23. விலைமகள். (குழம்பி)
25. ஓசை. (தலைகீழ்)
26. அக்காவின் கணவன்.
28. சுத்தப் பொய். (தலைகீழ்)
29. தூக்கத்தில் காண்பது. (குழம்பி)
31. பால் தரும்.
34. றோட்டுப் போட உபயோகப்படுவது. (தலைகீழ்)

## கு.எ.போட்டி-14 விடைகள்:

**இடமிருந்து வலம்:**
1. தொழிற்கட்சி
5. வங்கி
7. ரதம்
8. டமாரம்
11. பொட்டல்
13. மாதம்
14. ஞானி
15. மதம்
17. பராபரன்
20. காலை
21. கும்பாபிஷேகம்
24. நவயுக(ம்)
26. தந்தம்
29. ஆயத்தம்
30. சம்பாத்தியம்
32. ஆதரவாளர்
33. ஆன்மா

**மேலிருந்து கீழ்:**
1. தொண்டமான்
2. கரம்
3. தட்(டு)
4. சிம்பொனி
5. வருடம்
6. கிலி
9. மாதரம்
10. ரம்பம்
12. காதல்
14. ஞாபகம்
16. மலையகம்
18. ராகு
19. அபிநயம்
22. பாவத்தின்
23. ஆறுதல்
25. ஆயுதம்
27. ரத்த(ம்) 28. வாசம
29. ஆயர் 31. பாள(ம்)

சரியான விடை எழுதி ரூபா 100 பரிசாகப் பெறும் அதிர்ஷ்டசாலி:

**வ. ஆனந்தபாலு**
**74, லிங்கநகர்,**
**திருகோணமலை.**

பாராட்டுப் பெறத் தேர்ந்தெடுக்கப் பட்ட எட்டுப் பேர்கள் வருமாறு:

1. சி. தவரூபன்,
93, கண்டி வீதி, வவுனியா.
2. இ. கஜேந்திரகுமார்,
விஜய் கெமிகல்ஸ், பட்டிருப்பு.
3. கு. நளினி,
26, வெலிங்ரன் அடைவீதி, திருகோணமலை.
4. எம்.ஜே.ஏ. நஸீர்
19, 13வது ஒழுங்கை, செட்டி வீதி, புத்தளம்.
5. சீனா. சுந்தரலிங்கம்,
1ம் குறிச்சி, தம்பிலுவில்.
6. செ. சுதாகரன்,
91, கண்டி வீதி, வவுனியா.
7. வே. சுரேஷ்குமார்,
8ம் வட்டாரம், சாம்பல்தீவு, திருகோணமலை.
8. என். பிரியகஜானன்,
116/பி, அரசடி வீதி, வீரமுனை.

**விடைகளை மட்டும் தனியாக ஒரு தபாலட்டையில் எழுதி எதிர்வரும் 10ந் திகதிக்கு முன் அனுப்பிவையுங்கள்.**

**புதிய கண்ணோட்டம்,**
**த.பெ.இல: 442,**
**கொழும்பு.**

**அரசாக இருந்தாலும் சரி**
**புலிகளாக இருந்தாலும் சரி**
**முன்னோக்கியோ பின்னோக்கியோ**
**மக்கள்மீது பாயாதிருக்க வேண்டும்**



## ஈ.பி.டி.பி.யின் குத்துக்கரணம்

யாழ்ப்பாணம் மீது விமானக்குண்டு வீச்சு நிறுத்தப்பட வேண்டும், யாழ்ப் பாணத்துக்கு உணவுப் பொருட் கள் போக வேண்டும், போன்ற சில கோரிக்கை களை முன்வைத்து ஈபிடிபியினர் இரண்டு வாரமாக பாராளுமன்றத்தை பகிஷ்கரித்து வந் தனர். பின்னர் அவர்கள் விடுத்த அறிக்கையில், தாம் பல சுற்று பேச்சுக்களை ஜனாதிபதியுடன் நடாத்தியதாகவும், தமது கோரிக்கைகளை ஜனாதிபதி ஏற்றுக்கொண்டிருப்பதாகவும், எனவே, தாம் பாராளுமன்றத்துக்கு மீண்டும் சென்று அவசரகாலச் சட்டத்திற்கு வாக்களிக் கத் தயாராக இருப்பதாகவும் அறிக்கை விடுத் துள்ளனர்.

தீவுப்பகுதியில் புலி பிடிக்கின்றோம் என்ற போர் வையில், அங்குள்ள அரச நிர்வாகிகளையும், அப்பாவிமக்களையும் கொலை மிரட்டலுக்குள் ளேயே வைத்திருக்கும் இவர்கள், யாழ்ப்பாணத் தில் இராணுவ ஷெல்வீச்சுக்களையும், விமானத் தாக்குதல்களையும் கண்டிப்பது நம் நாட்டு வேடிக்கைகள் பலவற்றுள் ஒன்று.

கண்டிப்பதுடன் மாத்திரமல்லாமல், இதற்காக பாராளுமன்ற பகிஷ்கரிப்புப் போராட்டம் என்ற கண்கட்டி வித்தையும் நடாத்தப்படுகின்றது.

எப்படியோ ஜனாதிபதியுடன் பலசுற்று பேச்சுக் கள் முடிந்து பாராளுமன்றத்துக்கும் போய்விட் டார்கள். இனிமேல் ஷெல்வீச்சோ, விமானத் தாக்குதலோ யாழ் குடாநாட்டில் நடக்காது என நம்பலாம். விமானத்தைக் கண்டு மக்கள் இனி பங்கருக்குள் பதுங்கத் தேவையில்லை. அப்படி ஏதாவது நடந்தால் ஈபிடிபியினர் தகுந்த நடவடிக்கை எடுப்பார்கள்.

அதனைப்போன்றே இவர்கள் பாராளுமன்றம் போகுமுன்னரே யாழ்ப்பாணத்துக்கு உணவுப் பொருட்களும் போய்விட்டன. இனி அங்கு உணவுக்கு எந்தத் தட்டுப்பாடும் இருக்காது. அப்படி ஏதாவது வந்தால் அதனையும் ஈபிடிபி யினர் கவனித்துக் கொள்வர். யாழ் மக்கள் இனி தமது உயிருக்கோ, உணவுக்கோ அஞ் சத் தேவையில்லை.

யாழ்ப்பாணத்தில் விமானக்குண்டு வீச்சைக் கண்டித்து, பாராளுமன்ற உறுப்பினர் பதவிக ளில் இருந்து கூட்டணி எம்.பிக்கள் இராஜி னாமாச் செய்யப் போகின்றார்கள் என யாரோ கதைகட்டிவிட, கூட்டணி விழுந்தடித்து அப்படி நாங்கள் யாரும் இராஜினாமாச் செய்யவில்லை. பாராளுமன்றத்திற்குள் இருந்தே எதிர்த்து குரல் கொடுப்போம் என சிவசிதம்பரம் அறிக்கை விட்டார்.

அவர்கள் அரசியலில் பழுத்த கில்லாடிகள்! பாவம் ஈபிடிபியினர், தமிழ் மக்களை ஏமாற்றப் போய் தாமே ஏமாந்துபோய் உள்ளார்கள். ●

படிப்பகம்

www.padippakam.com



# “இந்திய மத்திய மாநில அரசுகளின் மௌனம் கலைய வேண்டும்”



இந்திய ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சி
தமிழ் மாநில செயலாளர். ந. நஞ்சப்பன்

இந்திய அரசும் தமிழக அரசும் மௌனம் கலைய வேண்டும். போரின்துயரத்திலிருந்து தமிழ் மக்களைப் பாதுகாக்க தீர்வுத் திட்டத்தை அமுலாக்கிடத் துணைபுரிய வேண்டும் என இந்திய ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சி தமிழ் மாநிலக் குழுவின் செயலாளர் ந.நஞ்சப்பன் அறிக்கையொன்றில் கேட்டிருக்கிறார். அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

இலங்கையில் நடந்துவரும் போரை முடிவுக்கு கொண்டுவரவும், தமிழ் மக்களுக்கு உரிமைகளை வழங்கிடவும், வழிவகுத்து ஒரு முற்போக்கான திட்டத்தை இலங்கை அதிபர் சந்திரிகா அவர்கள் அறிவித்துள்ளார். சிங்கள மொழியைப் போல தமிழ் மொழியும் ஆட்சி மொழியாக அறிவிக்கப்பட்டுள்ளது. சிங்கள பயங்கரவாதிகளால் படுகொலை செய்யப் பட்ட விஜயகுமாரதுங்காவின் எண்ணம் அவரது மனைவி மூலம் வடிவம் பெற்றுள்ளது.

இலங்கை தமிழர்கள் தன்மானத்துடனும், கண்ணியத்துடனும், பாதுகாப்புடன் வாழ வழிசெய்ய இந்திய அரசு தொடர்ந்து முயற்சிகளை மேற்கொண்டது. இது இந்திய அரசின் கடமையாகும். இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் அரசியல்பூர்வமான தீர்வுக்கு வழிசெய்தது.

அதற்கான பணியில் இந்திய அமைதிப் படை அளப்பரிய தியாகத்தைச் செய்தது. இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் வளர்ச்சியே இன்று அதிக அதிகாரம் கொண்ட மாநில சுயாட்சி அமைய வழிவக்க செய்துள்ளது.

ஆனால், இந்த அதிகாரப் பகிர்வு திட்டத்தை அறிவித்த பின்னரும் மத்திய அரசோ, மாநில அரசோ தங்களின் நிலைப்பாட்டை வெளிப்படுத்தாமல் மௌனம் சாதிப்பது சரியானதல்ல. அதுபோல் தமிழ் நாட்டில் கம்யூனிஸ்ட் கட்சிகளை தவிர எந்த கட்சிகளும் வாய் திறக்காமல் இருப்பது பல்வேறு விதமான ஐயத்தை ஏற்படுத்தியுள்ளது.

தனி ஈழம் என்ற நிலையை கைவிட்டு மாநில சுயாட்சி கோரிக்கையை விடுதலைப் புலிகள் வைத்தனர். மாநில சுயாட்சி அறிவித்த பின்னரும் அதை வரவேற்கவில்லை, மாறாக மூர்க்கத்தனமாக தாக்குதலில் ஈடுபட்டு வருகிறார்கள். அப்பாவி மக்களின் உயிர் பறிக்கப்பட்டு வருகிறது.

அதேபோல் இங்கும் மௌனிகளாக இருக்கும் கட்சிகள், இலங்கையில் போரை முடிவுக்குக் கொண்டுவந்து தமிழ் மக்களை பாதுகாக்கும் எண்ணம் துளியளவும் இல்லாது, இலங்கையில் தமிழர்களை ரத்தத்தில் மிதக்கவிட்டு, இங்கே நீலிக் கண்ணீர் வடித்து ஒப்பாரி வைத்து அரசியல் பிழைப்பு நடத்தவே முயல்கிறார்கள்.

சுயாட்சி அறிவிப்புகள் வெறும் பிரகடனமாக அமைந்துவிடாமல், நடைமுறைப்படுத்த முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென இலங்கை அரசை இந்திய ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சி கேட்டுக்கொள்கிறது.

புலிகளை வெற்றி கொள்வதென் தமிழ் மக்களின் ஆதரவின்றி செய்ய மு யாது. தமிழ் மக்களின் ஆதரவுடன்தா வெற்றிகொள்ள முடியும். எனவே சந்திரி அரசு தமிழ் மக்கள் அச்சமின்றி கௌரவ துடன் வாழ வழி செய்வதன் மூலமாகத்தா தமிழ் மக்களின் ஆதரவை பெறமுடியும்.

இந்திய அரசும், தமிழக அரசும் மௌன கலைய வேண்டும். போரின் துயரத்திலிருந் தமிழ் மக்களை பாதுகாக்க, இத் திட்டத் அமுலாக்கிட துணைபுரிய வேண்டும். இல கையிலிருக்கும் அனைத்துப் போராளி இய கங்களுக்கும் வேண்டுகோள் விடுத்து அதிக ரப் பகிர்வுத் திட்டம் நடைமுறைக்குவர முய சிகளை மேற்கொள்ள வேண்டும்.

ஒத்துவராத சக்திகள் தமிழர்களின் ந னில் உண்மையான, உணர்வுபூர்வமா அக்கறை இல்லாதவர்கள் என்பது மக் ளுக்கு உணர்த்தப்பட வேண்டும்.

தமிழகத்தில் உள்ள அரசியற் கட்சிக மௌனம் சாதிப்பதும், இரட்டை வே போடுவதும், ஈழத் தமிழர்களின் நலனுக் வேட்டு வைக்கக்கூடியதாக அமைந்துவிடு

எனவே இலங்கை தமிழர்களின் நலனி அக்கறை கொண்ட, நல்லெண்ண கொண்ட அரசியல் கட்சிகள், இலங்கை அரசு அறிவித்துள்ள அதிகார பரவலாக்கு மாநில சுயாட்சி அமைப்பு திட்டத்திற்கு ஆ ரவு தரவேண்டுமெனவும், இலங்கை தமிழ்ப்போராளிகள் அனைவரையும் தீர்வு திட்டத்தை ஏற்று அமைதி வாழ்க்கைக் திரும்ப அறைகூவல் விடுக்க வேண்டுமெ வும் இந்திய ஐக்கிய கம்யூனிஸ்ட் கட் கேட்டுக்கொள்கிறது.

இவ்வாறு ந. நஞ்சப்பன் தமது அறிக்கை யில் கேட்டுக் கொண்டுள்ளார்.



## போகிற போக்கில்...

காணாமற் போவோர்கள் பற்றியும், அதைத் தடுப்பதற்காக நாடுகள் கடைப் பிடிக்க வேண்டிய நடைமுறைகள் பற்றியும் சர்வதேச மனித உரிமைகள் பிரகடனம் கூறுகிறது. நமது நாட்டில் காணாமல் போபவர்கள் இரண்டுவகை உண்டு. நமக்கு எதிரான கருத்துக்கள், தீர்மானங்கள் வரும்போது எதிர்த்துக் குரல்கொடுக்க முடியாமல் நழுவிவிடுவது இந்த இரண்டாவது வகை. வேறு யார்? நமது சூரிய புத்திரர்களைத்தான் சொல்லுகிறேன். அவசரகாலச் சட்ட வாக்கெடுப்புக்களில் எல்லாம் பாராளுமன்றத்தில் ஆட்களைக் காண முடியாது. இதில் வேடிக்கை என்னவெனில் இப்படியான இடங்களில் விட்டுக்கொடுக்காது எமது உரிமைகளைப் பேச நாங்கள்தான் பொருத்தமானவர்கள் என்று வாக்குக் கேட்பது.

இதுதவிர, புலிகளுடன் பேச்சுவார்த்தை நடந்துகொண்டிருந்த காலத்தில் நிறையப் பேசி எழுதிக் கொண்டிருந்த 'தமிழறிஞர்'களையும் இப்போது காணக் கிடைக்கவில்லை. “புலித்தம்பிமாரும் நாங்களும்தான் சமாதானத்தைக் கொண்டுவரப் போகிறவர்கள். மற்றவர்களுக்கும் இந்தப் பிரச்சினைக்கும் சம்பந்தமேயில்லை, வாயை மூடிக்கொண்டிருங்கள்...” என்றெல்லாம் பேசி எழுதி எங்களைக் கிறுகிறுக்க வைத்த பெருமக்களையெல்லாம் எங்கேயென்றே காணோம். காணாமற் போனவர்கள் பற்றி வருகிற மனித உரிமைகள் அறிக்கைகளில் இந்த வகையறாக்களையும் சேர்த்துக் கொண்டாலென்ன?

கிழக்கில் பொலிஸ் காவல் அரண் ஒன்றைத் தாக்கிவிட்டு சென்றுகொண்டிருந்த புலிகளைப் பார்த்த முஸ்லீம் குடும்பமொன்று பயத்தில் அழுதிருக்கிறது. தாண்டிச் சென்ற அக்குழுப் புலிகளின் தலைவர் மீண்டும் திரும்பிவந்து குடும் பத்திடம் 'அழவேண்டாம். உங்களை சுடமாட்டோம். ஆனால் அனுப்புவம்' என்று கூறிவிட்டுச் சென்றாராம்.

– சோலையூரான்

## மாணிக்கப்போடி சிவஞானசெல்வம்

14-08-1995 இல் புதூர் கிராமத்தில் வைத்து புலிகளின் கிரனைட் வீச்சுக்கு இலக்காகி மரணமானார்.

1985ம் ஆண்டின் பிற்பகுதியில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியுடன் ஆதரவாளரராக தொடர்பை ஏற்படுத்திக்கொண்ட இவர் இறுதிவரை எம்முடனேயே இருந்தார். புகைப்படக் கலைஞரான சிவஞானம் அமைதியான சுபாவமும், நிதானமான போக்கும் கொண்ட அருமைத் தோழர். இவரது மறைவு எமது கட்சிக்கும் குறிப்பாக தோழரின் சொந்த இடமான கன்னங்குடா பகுதிக்கும் பேரிழப்பாகும்.

இன்று நம் மத்தியில் ஆயுத மேலாதிக்கத்துடன் வளர்ந்துவிட்டவர்கள், அவர்கள் சொல்கிற விடுதலையை எடுத்துக்கொண்டால் என்ன நடக்கும் என்பதை மீண்டும் மீண்டும் நிரூபித்து வருகிறார்கள். மக்களின் அழிவுகளையும், தேசத்தின் சிதைவையும் நிறுத்துவதற்காகக் குரல் கொடுத்து வருகிற நாம், இத்தகைய இழப்புகளோடும்தான் எழுந்து நடக்க வேண்டியிருக்கிறது.





### சிவஞானம்

மரணத்தின் வழி சென்று
உடல் சிதைந்து மறைந்து போனாய்!

இழப்பின் உணர்வறியச் சொல்லும்
உயிர் துறந்த வாழ்க்கை
இதுவென குறித்துக் கொள்வோம்

இல்லாமற்போன எங்கள் தோழனே!
வேரோடி விழுந்த கிளைகளுண்டு நாமாய்
நாளும் நினைவிருத்தி வழிதொடர
உன் தோழனுண்டு...!



22, வெளிவட்ட வீதி, வவுனியா சுரேஷ் பிரேமச்சந்திரன் அவர்களால் இரத்தனப்பிட்டிய CRC அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

படிப்பகம்